உண்மை

முப்பொருள் உண்மை

முரு பழ இரத்தினம் செட்டியார்

சித்தாந்தம் என்றால் முடிந்த முடிபு என்று பொருள். சைவ சமயம் இறைவனைப் பற்றியும் உயிரைப் பற்றியும் உயிரைப் பிணித்துள்ள தளையைப் பற்றியும் கண்டுள்ள முடிவுகள் சைவ சித்தாந்தம் எனப்படும்.

ஆதார நூல்கள்

சைவ சித்தாந்தத்திற்குத் தமிழில் பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சித்தாந்தச் சாத்திரங்களும் பிரமாண நூல்களாகும். திருமுறைகள் தோத்திரத்தை விரிவாகவும் சித்தாந்தத்தைச் சுருக்கமாகவும் சொல்லும். அவை சுருக்கமாகச் சொல்லும் சித்தாந்தக் கருத்துக்களை அவற்றின் வழி நின்று விரித்து முறைப்படுத்திச் சித்தாந்தச் சாத்திரங்கள் கூறும்.

வேதாகமங்கள்

வடமொழியிலுள்ள வேத உபநிடதங்களும் சைவாகமங்களும் திருமுறை ஆசிரியர்கள் தோன்றுவதற்கு முன் சைவ சமயத்திற்குப் பிரமாண நூல்களாக விளங்கின. ஒன்றுக்கொன்று முரணாகச் சொல்லும் பல்வேறு உரைகள் வேத உபநிடதங்களுக்கு உண்டு. சைவாகமங்களைக் கொண்டே வேதத்திற்கும் சைவம் பொருள் சொன்னதால் உபநிடதங்கள் பொது என்றும் சைவாகமங்கள் சிறப்பு என்றும் நம் அருளாசிரியர்கள் கொள்ளலாயினர். சைவாகமங்கள் சித்தாந்தத்தைப் பலபட விரித்துக் கூறுவதால் அவற்றில் பொருள் ஒருமை காண்பதற்குத் தமிழ்ச் சித்தாந்தச் சாத்திரங்களே பிரமாணமாயின. இக் காரணங்களால் சைவத்திற்குப் பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சித்தாந்தச் சாத்திரங்களுமே முழுப் பிரமாண நூல்களாக விளங்குகின்றன.

திருமுறைகளில் சித்தாந்தம்

முதல் திருமுறையில் திருஞானசம்பந்தர்

> விளையாததோர் பரிசில் பசு பாச வேதனை ஒண்
> தளையாயின தவிரவ்வருள் தலைவன் *

எனப் பதி, பசு, பாசம் பற்றிப் பேசுகிறார்.

மாயையை ஒளி பொருந்திய தளை என அவர் சொல்வது சிறந்த ஒரு சித்தாந்தக் கருத்தாகும்.

"முப்பதும் முப்பத்தாறும்" என அப்பர் சுவாமிகள் தத்துவம் முப்பத்தாறு பற்றிக் குறிப்பிடுகின்றார்.

"மலங்கள் ஐந்தால் மலநீக்கம் சுழல்வன்" என மணிவாசகர் ஐந்து மலங்கள் பற்றி விவரிக்கிறார்.

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம்

> பதிபசு பாசம் எனப் பகர் மூன்றில்
> பதியினைப் போல் பாசம் அநாதி

எனச் சைவ சித்தாந்தத்தைப் பிழிந்து வைக்கிறது. கடவுள், உயிர், தளை எனச் சொல்லப்படும் மூன்று பொருட்களுள் கடவுள் எப்படி அநாதியோ அப்படியே உயிர்களும் தளையும் அநாதி என்பது இதன் பொருள். இக்கருத்தையே சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த நூல்கள் விவரிக்கின்றன.

சிவஞானபோதம்

சிவஞானபோதம் பன்னிரு சூத்திரங்களையும், அச்சூத்திரப் பொருளைத் தெளிவு செய்கின்ற 81 வெண்பாக்களையும் அதிகரணங்கள் எனப்படும் உரைநடைப் பகுதிகளையும் உடையது. மெய்கண்டார் அருளிய சிவஞானபோதத்திற்கு உரைபோல அவர் மாணாக்கர் அருணந்தி சிவம் சிவஞான சித்தியார் செய்திருக்கிறார். இந்நூல்களுக்குச் சார்பாக உமாபதி சிவம் சிவப்பிரகாசம் என்னும் நூலைச் செய்திருக்கிறார். இம்மூன்றுமே பெரிய நூல்கள். ஏனைப் பதினொரு நூல்களும் சிற்சில கருத்துக்களை விளக்க எழுந்தவை; ஆனால் இப்பதினொரு நூல்களுள் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் இரண்டும் தனித்தன்மை வாய்ந்தவை. இப்பதினொரு சாத்திரங்களும் பேசும் அடிப்படைக் கருத்துக்கள் யாவை எனக் காண்போம்.

முப்பொருள் உண்மை

திருமந்திரம் கூறுவது போல இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) ஆகிய மூன்றும் அநாதி. இவற்றுள் இறைவனைப் பற்றி முதலில் ஆராய்வோம்.

கடவுள் உண்மை

கடவுளை, பக்குவம் முதிர்ந்தால்தான் அநுபூதியில் உணரலாம். முதலில் அனுமானத்தால் அவர் உண்மையை நாம் அறியலாம்.

ஒரு குழந்தையைப் பார்க்கிறோம்; அக் குழந்தையின் தந்தையை நாம் நேரில் பார்க்காவிட்டாலும் அக்குழந்தைக்கு ஒரு தந்தை உண்டு என்று உறுதியாக நாம் அனுமானிக்கலாம். ஏனெனில் தந்தையின்றிக் குழந்தை இல்லை என்பது நமக்குத் தெரியும். தந்தை இறந்து போயிருந்தாலும் அக்குழந்தைக்குத் தந்தை இருந்திருக்க வேண்டுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இதுபோலவே இவ்வுலக இயக்கத்தை நோக்கினால் கடவுள் ஒருவர் இருக்க வேண்டும் என நாம் உறுதியாக முடிவு செய்யலாம்.

உலக இயக்கம்

நாம் பிறக்கிறோம்; வளர்கிறோம்; இறக்கிறோம். நாம் விரும்பியவாறு பிறக்கவோ, இறப்பு வராதவாறு என்றும் நம்மை நிலைநிறுத்திக் கொள்ளவோ நம்மால் இயலாது. இதிலிருந்து நமக்கு மேற்பட்ட ஒரு சத்தியே நம்மைப் பிறப்பு, இறப்புக்கு உட்படுத்துகின்றதென்பது புலனாகிறது. நாம் மட்டும் அல்லாமல் உலகில் உள்ள அத்தனை உயிர் வர்க்கமும் பிறப்பு, இறப்புக்குட்படுவது கண்கூடு. உயிரற்ற சடப் பொருட்களாகிய கல், மண், நீர், நெருப்பு, காற்று ஆகியவற்றை உடைய இப்பூமியும் ஒரு காலத்தில் அழிந்து போகும் என்றும் வானின்கண் காணப்படும் ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் ஆகிய அனைத்துமே ஒரு காலத்தில் அழிந்து போகும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 'அனைத்தும் அழியும்' என்னும் கருத்தை யாரும் மறுக்கவில்லை.

ஆக்கமும் அழிவும்

ஆக்கமும் அழிவும் இயற்கைச் சத்திகளால் விளைபவை எனவும் இவற்றை நடத்துவிக்க இறைவன் ஒருவன் வேண்டுவதில்லை எனவும் நாத்திகர் கூறுவர். "ஒன்றின் அழிவில் மற்றொன்று தோன்றும்" எனப் பௌத்தர் கூறுவர். "அணுக்கள் திரள்வதால் பொருட்கள் தோன்றுகின்றன; பிரிவதால் அழிகின்றன; இவ்வாறு கூடுதல், பிரிதல் ஆகிய செயல்கள் இயற்கையில் நடைபெறுகின்றன" என உலகாயத விஞ்ஞானிகள் கூறுவர். எப்படிக் கூறினாலும் ஆக்கும் சத்தி, அழிக்கும் சத்தி ஆகிய இரண்டும்

* விளையாததோர் பரிசில் = எதிலிருந்தும் உண்டாகாமல் எப்பொழுதும் உள்ள தன்மை; பசு = உயிர்; பாசம் = ஆணவம்; வேதனை = கன்மம்; ஒண் தளை = ஒளி பொருந்திய கட்டாகிய மாயை; தவிரவ்வருள் தலைவன் = பசு பாச வேதனை ஒண் தளை ஆகியவற்றை நீக்குகின்ற இறைவன்.

இயற்கையில் அமைந்து கிடப்பன என்பதில் இவரிடையே கருத்து வேற்றுமை இல்லை.

சத்திகளின் நிலை

ஆக்கும் சத்தியும், அழிக்கும் சத்தியும் இயற்கையில் அமைந்து கிடக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். இவ்விருவகைச் சத்திகளும் சம வலிமையோடு அமைந்திருந்தால் ஒன்றை ஒன்று தடுக்குமாதலால் இரு வகைச் செயல்களுமே நடைபெறாமற் போகும். இவ்விரண்டில் ஏதேனும் ஒன்று கூடுதலான வலிமையோடு இருந்தால் மற்ற சத்தியை எந்தக் காலத்திலும் மேலோங்கவிடாமல் தடுத்துவிடும். அப்படியானால் ஆக்கமோ, அழிவோ இரண்டில் ஒன்றுதான் உலகில் நடைபெறும். உலக இயல்போ அவ்வாறில்லை. ஒரு சமயம் ஆக்கச் சத்தி மேலோங்கி நிற்கிறது. மற்றொரு சமயம் அழித்தற் சத்தி மேலோங்கி நிற்கிறது. அதனாலேயே இவ்விருவகை நிகழ்ச்சிகளும் என்றும் நடந்து கொண்டிருக்கின்றன. பல்வகைச் சத்திகள் உண்டெனக் கொண்டாலும் அவை ஆக்கச்சத்தியாகவும் அழிக்கும் சத்தியாகவும்தாம் இருக்க முடியும். இல்லையேல் இவ்விரண்டும் நடைபெற மாட்டா. அவை சமவலிமையாக இருந்தால் ஒன்றும் நடக்காது. ஏதேனும் ஒன்று கூடுதலாக இருந்தால் அந்த ஒன்று தான் நடக்கும். இரண்டும் நடைபெறுவதால் எவ்வாறு அவை நடைபெறுகின்றன என்பதைச் சிந்திக்க வேண்டும்.

மூன்றாவது சத்தி

இயற்கையில் உள்ள இவ்விருவகைச் சத்திகளுக்கும் வேறாக இவ்விரு வகைச் சத்திகளையும் மாறி மாறி இயக்கக் கூடிய மூன்றாவது சத்தி ஒன்று இருந்தாக வேண்டும். இயற்கைக்கு அறிவில்லை. அது தன் ஆற்றல்களை உள்ளவாறு அப்படியேதான் வெளிப்படுத்தும். சம வலிமையாக இருந்தால் சம வலிமையாகவே தோன்றும். கூடுதலாக இருந்தால் கூடுதலாகவே தோன்றும். இரண்டும் நடைபெற வேண்டுமானால் ஒன்று நடைபெறும் போது மற்றொன்றை முனையாதவாறு அடக்குவதற்கு மூன்றாவதாக ஒரு சத்தி இருக்க வேண்டும். அந்தச் சத்தி அறிவற்றதாக இருந்தால் அதனிடத்தில் எந்தச் சத்தி கூடுதலாக இருக்கிறதோ அந்தச் சத்தியைத்தான் பயன்படுத்தும். இரண்டையும் மாறி மாறி இயக்க வேண்டுமென்றால் மூன்றாவதாக உள்ள அந்தச் சத்திக்கு அறிவு இருக்க வேண்டும். அறிவுள்ள சத்திக்குத்தான் மாறி விடுத்தும் தடுத்தும் விருப்பம் போல் செயலாற்ற இயலும். அறிவுள்ள மூன்றாவது சத்தி ஒன்று இல்லையேல் அறிவற்ற இயற்கை தானே இவ்விரு வகைச் செயல்களையும் மாறி மாறி இயக்க இயலாது. ஆகவே மூன்றாவதாக உள்ள ஓர் அறிவுச் சத்தியின் இருப்பை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். இல்லையேல் இவ்விரு வகை நிகழ்ச்சிகளும் மாறி மாறி நிகழ்வதற்குக் காரணம் காட்ட முடியாமற் போகும்.

அறிவுச் சத்தி

கல், மண், நீர், நெருப்பு முதலியவற்றிற்கு அறிவில்லை. இயற்கை ஆற்றலே இவற்றைத் தோற்றுவித்திருக்கிறதென நாத்திகர் கூறுகின்றனர். இயற்கை ஆற்றலுக்கு அறிவிருந்தால் அது தோற்றுவித்துள்ள பொருட்களுக்கும் அறிவிருக்க வேண்டும். அவ்வாறில்லாமையால் இயற்கை ஆற்றலுக்கு அறிவில்லை என்பது தெளிவாகிறது. அறிவில்லாத இயற்கை தானே ஒன்றுக்கொன்று முரண்பட்ட ஆக்கம் அழிவுகளை மாறி மாறிச்செய்ய இயலாததால் அறிவுள்ள ஒரு சத்தியை அது வேண்டி நிற்கிறது என்பது புலனாகிறது. அறிவுள்ள மூன்றாவது சத்தி அறிவற்ற இயற்கைக்கு வேறாகவே இருக்க வேண்டும். அறிவற்ற இயற்கையை அடக்கியும் விடுத்தும் செயல்புரிய வேண்டியதிருப்பதால் அது பேராற்றல் வாய்ந்ததாக இருக்க வேண்டும். பேராற்றலும், பேரறிவும் வாய்ந்த அதனையே 'கடவுள்', 'இறைவன்' என ஆத்திக சமயங்கள் கூறுகின்றன.

இயற்கையும் கடவுளும்

கல், மண், நீர் முதலிய அறிவற்ற பொருட்களைச் சடப் பொருட்கள் எனச் சாத்திரம் சொல்லும். இச்சடப் பொருட்கள் அனைத்தும் அழிவுக்குட்படுவதால் இவற்றுக்கு ஒரு காலத்தில் தோற்றமும் இருந்திருக்க வேண்டும். தோற்றம் இருந்தால் தான் அழிவு இருக்கும். தோற்றத்திற்கு முன் இவை எவ்வாறு இருந்திருக்கும்? இப் பொருட்களைப் பகுத்துக் கொண்டே சென்றால் இவை அணுவாக மாறுகின்றன என்றும் அந்த அணுக்களையும் பகுத்தால் அவை ஒரு மாபெரும் சத்தியாக மாறுகின்றன என்றும் இன்றைய விஞ்ஞானம் மெய்ப்பித்திருக்கிறது. இம்மாபெரும் சத்தியே உலகச் சடப் பொருட்கள் அனைத்துக்கும் மூலமாக விளங்குகிறது. இம்மாபெரும் சத்திக்கு 'மாயை' எனச் சைவ சித்தாந்தம் பெயரிட்டுள்ளது. உலகாயதர் இம்மாபெரும் சத்தியையே 'இயற்கை' எனக் கூறுகின்றனர். 'அறிவில்லாத இம்மாயை தானே இயங்காது; அறிவில்லாத பொருளுக்குள் ஒனறுக்கொன்று முரண்பட்ட ஆக்க அழிவுத்தன்மைகள் இருக்க முடியாது. இறைவனே இம்மாயையிலிருந்து உலகத்தை உண்டாக்குகிறான்; காக்கிறான்; அழிக்கிறான்; படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய செயல்கள் அவனாலேயே நிகழ்கின்றன' எனச் சைவ சித்தாந்தம் சொல்கிறது. இக்கருத்தை ஒப்புக் கொள்ளாத நாத்திகர் இயற்கையே ஆக்கம், அழிவுகளைச் செய்கிறதெனச் சொன்னால் கூட முரண்பட்ட அவ்விரு வகைச் செயல்களையும் செய்வதற்கு அறிவுடைய ஒரு பொருளின் உதவி வேண்டியதிருக்கிறதென்பதை மேலே நிறுவினோம். எனவே 'கடவுள் ஒருவர் உண்டு; அவரின்றி உலக இயக்கம் நடைபெற இயலாது' என்பதை நியாய உணர்வோடு சிந்திக்கும் அனைவரும் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும்.

மூலப் பொருட்கள்

கடவுள் அனைத்தையும் உண்டாக்கினார் என்னும் கருத்தினை உடைய ஆத்திக சமயங்கள் உலகச் சடப் பொருட்களுக்கு மூலமாய் உள்ள மாயா ஆற்றலையும் அவரே உண்டாக்கினார் எனச் சொல்கின்றன. சில தரிசனங்கள் மாயா சத்தி கடவுளின் ஒரு கூறு என்கின்றன. மாயைக்கு அறிவில்லை; அறிவுடைய பொருளாகிய கடவுளிலிருந்து அது தோன்றியிருந்தால் அதற்கு அறிவிருக்க வேண்டும். கடவுளின் ஒரு கூறாக அது இருக்குமானால் கடவுளுக்கும் அறியாமை உண்டென்று சொல்ல வேண்டி வரும். சில சமயங்கள், 'அனைத்துப் பொருட்களும் உண்டாகுக' என இறைவன் சொன்னதும் அவை உண்டாயின என்று கூறுகின்றன. வேறெந்தப் பொருளிலிருந்தும் உண்டாகாமல் அவன் சொன்னதும் உண்டாயின என்றால் அவை அவனிடத்திலிருந்து உண்டாயின என்று தான் பொருள். இறைவனின் சொல் அவன் நினைவிலிருந்து தோன்ற வேண்டும். அவன் நினைவு அறிவு மயமானது. அதிலிருந்து தோன்றும் உலகம் அறிவுடையதாகவே இருக்கும். பூமி, ஞாயிறு, திங்கள் போன்ற சடப் பொருட்கள் அதாவது அறிவற்ற பொருட்கள் அறிவுடைப் பொருளாகிய இறைவனிடமிருந்து தோன்ற இயலாது. எனவே உலகச் சடப் பொருட்கள் அனைத்துக்கும் மூலமாயுள்ள 'சட ஆற்றல்' அதாவது 'இயற்கை' என்று பிறராலும் 'மாயை' எனச்சைவ சித்தாந்திகளாலும் சொல்லப்படும் பொருள், எதிலிருந்தும் தோன்றாமல் எப்பொழுதும் உள்ள அநாதிப் பொருளாக அதாவது துவக்கமும் முடிவும் அற்ற பொருளாகவே இருக்க வேண்டும். இதனாலேயே சைவ சித்தாந்தம் மாயை மூலப் பொருள் என்றும், அஃது அநாதி என்றும் கூறுகிறது.

கடவுள் வேறொரு பொருளிலிருந்து உண்டாகியிருந்தால் அவர் தோற்றமும் இறுதியும் உடையவராவார். அந்தப் பொருளும் வேறொன்றிலிருந்து தோன்றியிருந்தால் அஃதும் தோற்றமும் இறுதியும் உடையதாகும். இப்படியே பார்த்தால் ஒரு பொருள் தோற்றமும் இறுதியும் இல்லாததாய் என்றும் உள்ள அநாதிப் பொருளாய் இருக்க வேண்டும். அப்படி ஒரு பொருள் இருந்தால் தான் தோற்றமும் இறுதியுமுடைய பொருட்களை இயக்க முடியும். எந்தப்

பொருள் தோற்றமும் இறுதியும் இல்லாததாய், பேரறிவும் பேராற்றலும் உடையதாய், எந்தப் பொருளின் உதவியுமின்றித் தானே இயங்கக் கூடியதாய் எந்தத் தேவையும் அற்றதாய் இருக்கிறதோ அந்தப் பொருளைத்தான் கடவுள் என்று சொல்கிறோம். இதனால் கடவுளை யார் உண்டாக்கினார் என்னும் வினா எழ இடமில்லை. கடவுள் அநாதியாக விளங்குகிறார். கடவுளைப் போலவே மாயையும் யாராலும் தோற்றுவிக்கப்படாமல் அநாதிப் பொருளாக விளங்குகிறது. நாத்திகர் இயற்கையை அநாதி என்பதால், மாயை அநாதி எனச் சைவ சித்தாந்தம் சொல்வதை அவர் மறுப்பதற்கில்லை. 'கடவுளும் அநாதி, மாயையும் அநாதி' என்பது சைவசித்தாந்தம். அறிவுப் பொருளும் அநாதி; அறிவற்ற சடமாகிய மாயையும் அநாதி என்று சொன்னால் இறைவ னுக்குப் பெருமை குன்றுமே என வினவலாம். அறிவற்ற சடமாகிய மாயை தன் இயக்கத்திற்கு இறைவனை வேண்டி நிற்பதால் இறைவன் மேற்பட்டு விளங்க மாயை அவனுக்குள் அடங்கி அவனுடைய கருவியாகப் பயன்படுகிறது. எனவே அவன் பெருமைக்கு எவ்வித இழுக்குமில்லை என்க.

உலகப் படைப்பும் கடவுள் உண்மையும்

உலகப் பொருட்கள் சங்கிலித் தொடர் போல் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றுமாதலால் துவக்கம் வேண்டுவதில்லை என்பது பௌத்த சித்தாந்த மாகும். பொருட்கள் அழியாமல் நிலையாக என்றும் இருந்தால் துவக்கம் என ஒன்று வேண்டுவதில்லை. ஒவ்வொரு கணமும் பொருட்கள் அழிந்து கொண் டிருப்பதால் அந்த அழிவு எதனால் நிகழ்கிறது என்னும் வினா எழுகிறது. நிலையான ஒரு பொருள் இல்லாவிட்டால் நிலையற்ற பொருட்கள் தம்மைத் தாமே இவ்வாறு தோற்றம், அழிவு ஆகிய இரண்டுக்கும் உட்பொருத்திக் கொள்ள இயலாது.

பெற்றோர் வழி நாம் தோன்றுகிறோம்; பெற்றோர் அவர் பெற்றோர் வழித் தோன்றுகின்றனர். நாமும் அழிகிறோம்; பெற்றோரும் அழிகின்றனர். இப்படியே பார்த்துக் கொண்டு போனால் ஏதோ ஒன்று தோற்றமும் அழிவும் இல்லாமல் இருக்க வேண்டும் என்றும் அதனால்தான் தோற்றமும் அழிவும் உடைய இவ்வியக்கம் நடைபெறுகிறதென்றும் கொள்ள வேண்டுவதாகிறது.

அச்சு இயந்திரம் தானே ஓர் 'ஆக்ஸ்ஃபர்ட்' அகராதியை உருவாக்க இயலுமா? கணினி என்னதான் அற்புதமாகக் கணக்குகளைச் சரி செய்து தந்தாலும் அறிவுடையான் ஒருவன் பொருத்தி வைக்காமல் அது தானே இவ்வாறு செய்கிறது என்றால் ஏற்றுக் கொள்ள இயலுமா? நம் உடலின் அமைப்பு திட்டமிட்டுச் செய்த ஒரு தொழிற்சாலை போல் இருக்கிறது. சுவாசப்பை, உணவுப்பை முதலியனவற்றைத் தனித்தனியாக அமைத்தும் உண்ணும் உணவினைத் தனித் தனிச் சத்துக்களாகப் பிரிக்கும் கருவிகளை அமைத்தும் கண், காது முதலிய பொறிகளை அமைத்தும் தொழிலாற்ற அறிவற்ற இயற்கையால் இயலுமா? இவ்வளவு திட்டத்தோடு அமைப்பதற்கு அறிவு வன்மை இல்லையேல் இயலாது.

சார்லஸ் டார்வின், உயிர்கள் பரிணாம வளர்ச்சியின் காரணமாகத் தோன்றின என்கிறார். அவ்வளர்ச்சிக்குக் காரணமாகத் தட்ப வெப்ப நிலையும் உணவு தேடும் முயற்சியும் சூழ்நிலைகளும் அமைந்தன என்று கூறுகிறார். 'அமீபா' எனும் உயிர் ஆண், பெண் வேற்றுமையின்றித் தானே தன்னிலி ருந்தே தன் இனத்தை உற்பத்தி செய்கிறது. தட்ப வெப்பம், உணவு நிலை, சூழ்நிலை முதலிய மாற்றங்களால் 'அமீபா'வில் இல்லாத பால் வேற்றுமை பரிணாம வளர்ச்சியில் முன்னேறிய உயிர்களிடத்தே உண்டாகக் காரணம் இல்லை. பெண்பால் உயிர்களே இனத்தை உற்பத்தி செய்யுமாறும், ஆனால் ஆண்பால் உயிர்கள் இன்றி அவற்றைச் செய்ய முடியாமலும் உள்ள நிலை பரிணாம வளர்ச்சியால் ஏற்பட இயலாது. அது திட்டமிடப்பட்ட ஒரு செயலா கவே விளங்குகிறது. அழகுணர்ச்சி, ஒழுக்க உணர்ச்சி, பொறுப்புணர்ச்சி முதலிய அறிவுணர்ச்சிகள் வளர்வதற்காகவே பால் வேற்றுமை அமைந்திருப்

பதால் அறிவுடைப் பொருள் ஒன்றால் வகுக்கப்பட்ட ஒரு திட்டமாகவே இது விளங்குகிறது. அறிவுடைப் பொருளின் பதிவு உலகப் படைப்பில் இனிது புலப்படுவதால் இயற்கைப் பரிணாமமாக உயிர்களின் தோற்றத்தைச் சொல்ல இயலாது. எலிக்குள்ள தந்திரம் பெருச்சாளிக்கில்லை; பூனைக்குள்ள தந்திரம் யானைக்கில்லை. பாம்புக்கும் கீரிக்கும் இயல்பிலேயே பகையுணர்ச்சி ஏன் வரவேண்டும்? இத்தகைய நிலைகளையும் பால் வேற்றுமையையும் ஆராய்ந்த விஞ்ஞானிகளில் பலர் சார்ல்ஸ் டார்வினின் கருத்துக்கள் பொருத்தம் அற்றதெனக் கூறுகின்றனர். இதனால் இறைவனே உயிர்களைப் பல்வேறு பிறவிக்குட்படுத்துகிறான் என்பது புலனாகிறது.

கடவுள் யாராலும் தோற்றுவிக்கப்படாத அநாதி நித்தியப் பொருள் என்றும் உலகத்துச் சடப் பொருட்கள் அனைத்துக்கும் மூலமாக உள்ள மாயையும் யாராலும் தோற்றுவிக்கப்படாத அநாதி, நித்தியப் பொருள் என்றும் ஆனால் அறிவற்ற மாயை தானே உலகத்தைத் தோற்றுவிக்க முடியாதாத லால் கடவுளே மாயையினின்றும் உலகத்தைப் படைத்துள்ளார் என்றும் சைவ சித்தாந்தம் நிலை நாட்டுகிறது.

உயிர்கள் உண்மை

நமக்கு உயிரும் உண்டு; உடலும் உண்டு. ஒவ்வோர் உயிரும் உடலோடு தான் உலகில் உலவுகிறது. சைவ சித்தாந்தம் உயிரை 'ஆன்மா' எனச் சொல்கிறது. புல் முதல் மனிதர், தேவர் வரை எல்லாம் ஆன்மாக்களே ஆகும். உயிர் பிரிந்தால் உடலுக்கு அறிவோ, இயக்கமோ இல்லாமற் போவதோடு அழிந்தும் போகிறது. இதனை நோக்கும் போது உடல் அறிவற்ற சடப் பொருள் என்பதும், உடலுக்குள் இருக்கும் உயிரே அறிவுடைப் பொருள் என்பதும், உடலும் உயிரும் ஒன்றாகக் காணப்பட்டாலும் உடல்வேறு உயிர் வேறு என்பதும் புலனாகின்றன. எவ்விடத்தில் அறிவுணர்ச்சி காணப்பட்டா லும் அவ்விடத்தில் உயிர் உண்டென்பது உறுதி. சடத்திலிருந்து உயிர் உண்டாகாதென்பதில் இன்று வரை விஞ்ஞானம் உடன்படவே செய்கிறது. விஞ்ஞானிகளில் சிலர் சடப் பொருளிலிருந்து உயிரை உண்டாக்க முயல்வது பற்றி அடிக்கடி செய்தித்தாளில் படிக்கிறோம். சடத்திலிருந்து உயிர் தோன்று கிறதென்றே வைத்துக் கொள்வோம். இதுவரை அது தோன்றாமல் இருந்த தற்கு அச்சடப் பொருட்களுள் ஏதோ ஒன்று அதை மறைத்திருந்ததென்றும் அதனை நீக்கியதும் அது தோன்றுகிறதென்றும் கொள்ள வேண்டும். அவ்வா றானால், அங்ஙனம் மறைத்து நின்ற பொருள் சடமாகவே இருக்க வேண்டும். சடப் பொருள் தானாக எதையும் தோற்றுவிக்க இயலாது என்பதும் தெளிவு. எப்படிப் பார்க்கினும் சடம் வேறு, அறிவுடைப் பொருள் வேறு என்பது புலனாகும்.

உயிர் அறிவுடையது; உடல் அறிவற்றது. ஆனால் உயிரின் அறிவு உடலோடு கூடி நிற்கும் போது தான் விளக்கமுறுகிறது. இதனால் அதன் அறிவு விளக்கத்திற்கு உடல் தேவை எனத் தெரிகிறது. உயிர்க்கு அறிவிருந் தும் உடலைத் தானே படைத்துக் கொள்ளும் ஆற்றல் அதனிடம் காணப்பட வில்லை. தாய் தந்தையர் வாயிலாகக் குழந்தை பிறக்கிறதென்றாலும் குழந்தையின் வடிவம், குணம், நிறம் பால் ஆகியவற்றைப் பெற்றோர்களால் முடிவு செய்ய இயலவில்லை. அறிவற்ற மாயை பல்வேறு கருவிகளைக் கொண்ட உடலைத் தன் ஆற்றலால் படைக்க இயலாது. உடலில் திட்டமிடப் பட்ட வடிவமைப்பு இருப்பதால் அறிவுடைப் பொருளே அதனைப் படைத்தி ருக்க வேண்டும். அந்த அறிவுடைப் பொருள் உயர் அறிவினும் பார்க்க மிக அறிவுடையதாக இருக்க வேண்டும். அறிவுடைப் பொருளாகிய கடவுள் தன்னிலிருந்து உயிர்க்கு வேண்டிய உடலைப் படைத்திருந்தால் உயிர் நீங்கினும் உடலுக்கு அறிவிருக்க வேண்டும். உடல் அறிவற்ற சடமாக இருப்பதால் கடவுள் அறிவற்ற மாயையிலிருந்தே உயிர்களின் பொருட்டு உடலைப் படைத்திருக்கிறார் என்பது புலனாகிறது. மாயையிலிருந்து இறை

வன் உலகைப் படைத்திருக்கிறான் என மேலே குறிப்பிட்டோம். இதனால் உடலும் உலகும் மாயையிலிருந்து இறைவனால் படைக்கப்பட்டவை என்பது தெளிவு.

உயிரை இறைவன் படைக்கிறானா என்பது ஆராய்தற்குரியது. பேரறிவுப் பொருளாகிய கடவுளுக்கு எந்தத் தேவையும் இல்லை. இல்லாத உயிர்களைப் புதிதாக அவன் ஏன் படைக்க வேண்டும்? தன்னை வணங்குவதற்காகக் கடவுள் உயிரைப் படைத்தார் என்றால் அவர்க்கு ஒரு தேவை இருக்கிறதென்பதை அது புலப்படுத்தும். அவர்க்கு உயிர்களால் எவ்விதப் பயனும் இல்லை. எனவே கடவுளைப் போல, மாயையைப் போல, உயிர்களும் யாராலும் உண்டாக்கப்படாமல் என்றும் உள்ள அநாதிப் (நித்தியப்) பொருள் என சைவ சித்தாந்தம் கூறுகிறது.

கடவுளுக்கு உலகம் தேவை இல்லை. மாயையோ சடப் பொருள். உலகத் தோற்றத்தால் அதற்கு எந்தப் பயனும் இல்லை. அறிவுடைப் பொருட்களாகிய உயிர்கள் உலகால் பயன் பெறுகின்றன. எந்தத் தேவையும் அற்ற இறைவன் அறிவற்ற சடப் பொருளாகிய மாயையிலிருந்து உயிர்களின் பொருட்டு இவ்வுலகைப் படைத்திருக்கிறான் என்பது தெரிகிறது. தனக்குத் தேவை இல்லாதிருந்தும் உயிர்களின் பொருட்டு இறைவன் உலகைப் படைத்திருப்பதிலிருந்து அவன் பேரருளாளன், பரம கருணாநிதி என்பது தெளிவாகிறது. உயிர்களுக்காக உலகப் படைப்பு நிகழ்கிறதென்றால் உயிர்கள் அநாதியாகவே இருக்க வேண்டும். இறைவனுக்கு உயிர்கள் தேவை இல்லையாதலால் அவன் அவற்றைப் படைத்திருக்க மாட்டான். இவ்வாறு நோக்கும் போதும் உயிர்கள் யாராலும் தோற்றுவிக்கப்படாத அநாதிப் பொருட்கள் என்பது விளங்கும்.

உயிர்களை இறைவன் படைத்திருந்தால் அவற்றின் அறிவுக் குறைவுக்கும் இன்ப, துன்பங்களுக்கும் அவனே காரணன் என்றாகிவிடும். இறைவனுக்கு ஆற்றல் இருக்கிறது என்பதற்காகப் புதிதாக உயிர்களைப் படைத்து இன்ப துன்பங்களுக்குள்ளாக்குவது அவன் கருணைக்கு இழுக்காகும். "உயிர்களுக்கு இறைவன் உரிமையை வழங்கினான். அவ்வுயிர் தடுக்கப்பட்ட பழத்தை உண்டு இறைவன் கட்டளையை மீறியது; அதனால் இறைவனின் தண்டனைக்குள்ளாகியது" எனக் கிறித்துவ சமயம் சொல்கிறது. உரிமையை வழங்கிய இறைவன் எதிலும் மயங்காத அறிவுத் திண்மையையும் உயிர்க்கு வழங்கியிருந்தால் தடுக்கப்பட்ட பழத்தை உயிர் உண்டிருக்குமா? எனவே உயிர்களை இறைவன் படைக்கவில்லை என்றும் அவை என்றும் உள்ளவை என்றும் அறிவில் உள்ள வலிமைக் குறைவு அவற்றுக்கு இயல்பிலேயே அமைந்த தன்மை என்றும் சைவ சித்தாந்தம் கூறுகிறது.

புல் முதல் மனிதர் வரை உயிர் பலவாக இருப்பதைக் காண்கிறோம். உயிர் அனைத்திற்கும் அறிவு, இச்சை, செயல்கள் பொது; ஆனால் ஒவ்வொன்றுக்கும் உள்ள தனித்தன்மை (individuality) காரணமாக அவை தம்முள் வேறுபடுகின்றன. அவை எண்ணிலி (infinity) எனச் சித்தாந்தம் சொல்லுகிறது. இதனாலேயே எத்தனை உயிர்கள் முத்தி பெற்றாலும் முத்தி பெற வேண்டிய உயிர்கள் என்றும் இருக்கும் என்பது தெளிவு. எண்ணிலியிலிருந்து எத்தனை தொகையைக் கழித்தாலும் எண்ணிலி எண்ணிலியாகவே இருக்கும்.

கடவுளும், உயிரும், மாயையும் அநாதி எனக் கண்டோம். இனி உயிர்களுக்கு ஏன் உலகமும் உடலும் தேவை என்பதைச் சிந்திப்போம்.

உலகத் தேவை

உயிரின் அறிவு, உடல் இல்லையேல் விளங்கவில்லை. உடலுக்கு அறிவில்லை; உயிருக்குத் தான் அறிவு இருக்கிறது. அங்ஙனமிருந்தும் உடற்கருவிகளை உயிர் பற்றாத போது அஃது தன்னை உணராமல் கிடக்கிறது. தூக்கத்தின் போதும் மூர்ச்சையுற்ற போதும் அறிவு விளங்காமல் உயிர் கிடப்பதன் காரணம் என்ன? அந்நிலையில் உடற்கருவிகளை உயிர் பற்றவில்லை. உடற்கருவிகள் இல்லாதபோது உயிர்க்கு அறிவு இருந்தும்

அவ்வறிவு விளங்காமல் இருப்பதால் அதனை இருள் போன்ற ஒரு பொருள் மறைக்கிறது என்பது புலனாகிறது. கண்ணுக்குப் பார்க்கும் சக்தியிருந்தும் இருள் மறைக்கும்போதும் இடையில் எதுவும் ஒளியை மறைக்கும்போதும் பார்க்க இயலாது. இது போல உயிர்க்கு அறிவிருந்தும் இருள் போன்ற ஒன்று அதனை மறைப்பதால் அறியாமை வயப்பட்டுக்கிடக்கிறது. விளக்கொளி வந்ததும் கண்ணால் பார்க்க முடிவது போல ஒளிப்பொருளாகிய மாயா உடற்கருவிகளை உயிர் பற்றியதும் அதன் அறிவு சிறிது விளங்குகிறது. எனவே மறைப்பைச் செய்யும் ஒரு பொருள் உண்டு என்றும் அதற்கு ஆணவ மலம் எனப் பெயர் என்றும் சாத்திரம் கூறுகிறது.

உயிர் உடற்கருவிகளைப் பற்றிச் செயலாற்றும் போது நல்லனவற்றை விடத் தீயவற்றிலேயே அதற்கு விருப்பம் மிகுதியும் செல்கிறது. உலகத்துப் பொருட்களை அனுபவித்து அனுபவித்துப் பல முறை இன்ப துன்ப அனுபவங்களைப் பெற்ற பின்னரே உயிர் திருந்துகிறது. உயிரின் அறிவை ஆணவ மலம் மறைத்திருப்பதலாயே தீமை எனத் தெரிந்தும் அது அதன் வழி செல்கிறது. மாயா கருவிகள் ஒளிப் பொருளாயினும் முழு ஒளி பெற்றவை அல்ல. இறைவன் அருளொளிதான் முழு ஒளியுடையது. விளக்கொளியின் உதவியில் செல்லும் போதும் குழிகள் இருப்பது தெரியாமல் அவற்றில் விழுவது போல, மாயா கருவிகளின் ஒளியால் உயிர் சென்றாலும் ஆணவ மல இருளின் மறைப்பு ஆற்றலால் அது தீமையின்பாற் செல்கிறது. தான் பிறரின் உதவியின்றி வாழ முடியாது என அறிந்திருந்தும், தனக்கு எத்தனை செல்வமும் அறிவும் அதிகாரமும் இருப்பினும் மரணம் வந்தே தீரும் என்பதை அறிந்திருந்தும் தன்னைப் பெரிதாக உயிர் கருதுவது ஆணவ மல மறைப்பினால் ஏற்படும் விளைவேயாகும்.

இருள் போன்ற இத்தகைய ஆணவ மலப் பொருளை இறைவன் படைத்திருக்க மாட்டான். இது அறிவை மறைக்கின்ற பொருளாக இருப்பதால் அறிவற்ற சடமாகவே இருக்க வேண்டும். அறிவை அறிவு மறைக்காது. அறிவற்ற சடமாக இருப்பதால் இது மாயையிலிருந்து தோன்றியிருக்குமோ என்னும் ஐயம் எழலாம். ஒளிப் பொருளாகிய மாயையிலிருந்து இருட்பொருளாகிய ஆணவ மலம் தோன்றாது. எனவே ஆணவ மலம் எதிலிருந்தும் தோன்றாமல் எப்பொழுதும் உள்ள நித்தியப் பொருளாகவே இருக்க வேண்டும். கடவுளும் உயிர்களும் மாயையும் எப்படி அநாதியோ அப்படியே ஆணவ மலமும் அநாதி எனச் சைவ சித்தாந்தம் சொல்கிறது.

மூலகன்மம்

ஆணவ மலம் யாராலும் படைக்கப்படாத அநாதி நித்தியப் பொருள் எனக் கண்டோம். உயிர்களும் அநாதி எனக் கூறினோம். அநாதியே உள்ள ஆணவ மலத்திற்கு அநாதியே மறைக்கும் தன்மை உண்டாதலால் அநாதியே உள்ள உயிர்களின் அறிவை அஃது அநாதியே மறைத்திருக்கிறது எனச் சைவ சித்தாந்தம் சொல்கிறது.

உயிர்களின் அறிவு, இச்சை, செயல்கள் இறைவனின் அறிவு, இச்சை, செயல்கள் போல வலிமையுடையன அல்ல. இதனால் ஆணவ மலம் உயிரை மறைக்க முடிகிறது. உயிரின் அறிவு அநாதியே உள்ளதாதலால் வலிமைக் குறைவு அதன் இயல்பே என்பது பெறப்படும். மலம் உயிரின் அறிவை மறைக்கும் போது உயிரின் அறிவு அதனைப் பற்றி அழுந்துகிறது. இவ்வாறு பற்றி அழுந்தியதால்தான் உயிர் தன்னளவிலும் அறிவு, இச்சை, செயல்கள் விளங்காமல் மறைப்புக்குள்ளாகிறது. உயிர்களின் அறிவு, இச்சை, செயல்கள் ஆணவ மலத்தை அநாதியே பற்றி இயக்கமின்றிக் கிடப்பதால் அநாதியே ஆணவ மலத்தைப் பற்றிய அச் செயலை "மூலகன்மம்" எனச் சாத்திரம் சொல்கிறது. "அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினையாய்" எனச்

சிவஞான சுவாமிகள் சிவஞான போதச் சிற்றுரையில் இதனைக் குறிப்பிடுகி றார்.

அநாதியே உயிர் ஆணவ மலத்தைப் பற்றியிருப்பதால் மூலகன்மமாகிய அச்செயலும் அநாதி ஆகிறது.

அநாதிப் பொருட்கள்

இதுகாறும் ஆராய்ந்தவற்றால் இறைவன், உயிர், ஆணவம், மூலகன் மம், மாயை ஆகிய ஐந்தும் அநாதி என்பது பெறப்படும். ஆணவம், மூலகன் மம், மாயை ஆகிய மூன்றும் சடமாதலாலும் உயிரைப் பிணிப்பதாலும் 'பாசம்' என்னும் ஒரு பெயரால் சுட்டப்படும். உயிர் பாச வயப்பட்டிருப்பதால் 'பசு' எனக் கூறப்படும். உயிர்க்கு இறைவன் தலைவன். ஆதலால் பதி என அழைக்கப்படுகின்றான். ஆகவே பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை) எனப்படும் மூன்று பொருட்களும் அநாதி என்பது தெளிவு. திருமந்திரம், பதியினைப்போல் பசு, பாசம், அநாதி என இக்கருத்தையே கூறியிருக்கிறது. இறைவனின் அருட்சத்தி நமக்கு உலகியல் இன்ப துன்பங்களைத் தரும் போது திரோதான சத்தி எனப்பெயர் பெறும். முத்தியை அருளும் போதுதான் அருட்சத்தி என்று கூறப்படும். திரோதான சத்தியையும் 'மலம்' எனக் கூறுதல் சித்தாந்த வழக்கு. மாயையைச் சுத்த மாயை, அசுத்த மாயை என இரண்டாகவும் கூறுதல் மரபு. எனவே ஆணவம், கன்மம், சுத்த மாயை, அசுத்த மாயை, திரோதானம் ஆகிய ஐந்தும் மலமெனக் கொண்டே மாணிக் கவாசகர் "மலங்கள் ஐந்தால் மலநீக்கம் சுழல்வன்" எனச் சொல்லியிருக்கி றார்.

மலநீக்கம்

இறைவன் எல்லாம் வல்லவன்; உயிர் ஆணவ மலத்தைப் பற்றாதவாறு தடுத்திருக்கலாம்; அல்லது உடனே அதனை ஆணவ மலப்பிடியிலிருந்து விடுவித்திருக்கலாம். ஏன் அவ்வாறு செய்யவில்லை என வினவலாம்.

உயிர்களின் அறிவு படிப்படியாகப் பயிற்சியால் தெளிவுறும் தன்மை உடையது. உயிர்களை இறைவன் படைக்கவில்லையாதலால் இத்தன்மை அவற்றுக்கு இயல்பிலேயே உள்ளதாகும். இத்தன்மையை இறைவன் மாற்றி னால் அஃது அந்த உயிரை அழித்துப் புதிய உயிரை உண்டாக்கியதாகவே முடியும். இருக்கிற உயிரை அதன் இயல்புப்படியே பயிற்றுவித்து உய்விப்பது தான் இறைவன் கருணைக்கும் அறிவுடைமைக்கும் சிறப்பாகுமே அன்றி அவ்வுயிரை அழித்துப் புதிய உயிரை உண்டாக்குவது சிறப்பாகாது. மேலும் புதிய உயிரை உண்டாக்க வேண்டிய அவசியம் இறைவனுக்கு இல்லை. ஆணவ மலத்தைப் பற்றாதவாறு தடுத்தாலும் உடனே நீக்கினாலும் அறிவுப் பொருளாகிய உயிர் தன் முயற்சி இன்மையால் பயனும் பக்குவமும் பெறாமற் போய்விடும். எனவே தன் வல்லமையை இறைவன் உயிர்களின் தன்மைக்கு ஏற்றவாறு பயன்படுத்துகிறான். உயிர்கள் முயலும் பொருட்டு அற்புதமான இவ்வுலகைப் படைத்தளித்து அறிவு விளக்கமுறுதற்கேற்ற கருவிகளை உடைய உடல்களையும் படைத்தளிக்கிறான். உயிர்கள் உடலைக் கொண்டு உலகிடை நல்வினை, தீவினைகளைப் புரிகின்றன. அவ்வினைகளுக்கேற்ப இன்ப, துன்பப் பயன்களை இறைவன் ஊட்டுகிறான். இவ்வனுபவத்தால் உயிர் அதன் இயல்புப்படி மெல்ல மெல்ல அறிவு விளக்கம் பெற்று முன்னேறுகிறது. வினைப் பயன்களுக்கு ஏற்றபடி பல்வேறு பிறவிகளைப் பல்வேறு தடவை இறைவன் உயிர்களுக்கு அளிப்பது அவை அனுபவம் பெறுவதற்காக ஆகும். இறுதியில் அனுபவம் முதிர்ந்த உயிர் இறைவனே முழுமையான இன்பம் தர வல்லவன் என்பதை அறிந்து அவனைச் சரணடைந்து முத்தி பெறுகிறது. முத்தியில் உயிர் இறைவனைச் சார்ந்து நிற்பதால் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நித்தியமாக இருப்பினும் ஆண்டு அதனை ஒரு சிறிதும்

பாதிக்க முடியாமற் போகின்றன. இதனை "மல நீக்கம்" என்றும் இறைவனைச் சார்ந்து என்றும் மாறாத பேரின்பத்தில் உயிர் திளைப்பதைச் "சிவப்பேறு" என்றும் சாத்திரம் சொல்கிறது.

காரிய கன்மமும், காரிய மாயையும்

தாவரம், பறவை, விலங்கு, மானிடர் என உயிர்கள் பல்வேறு பிறவிகள் எடுக்கின்றன. உயிர்கள் அநாதியே ஆணவ மலத்தைப் பற்றிக் கிடக்கும் பொழுது மூல கன்மத்தைத் தவிர வேறு வினைகள் எதுவும் செய்யவில்லை; செய்யவும் முடியாது. அப்பொழுது இறைவன் எல்லா உயிர்களுக்கும் ஒரே விதமாகவே சூக்கும தேகத்தை வழங்குகிறான். சூக்கும தேகம் பெற்றதும் உயிரின் அறிவு சிறிது விளங்குகிறது. சூக்கும தேகத்தின் கண்ணுள்ள மனத்தில் உயிர்களின் சிறப்பு இயல்பு வேறுபாட்டிற்கேற்ப விருப்பு வெறுப்புக் கள் தோன்றுகின்றன. உயிர்களின் சிறப்பியல்பு வேறுபாட்டால் ஆணவ மல மறைப்பிலும் வன்மை மென்மைகள் உண்டு. இதனால் ஒவ்வோர் உயிர்க்கும் வெவ்வேறான விருப்பு வெறுப்புகள் தோன்றுகின்றன. அவ்விருப்பு வெறுப்புக் களையே துவக்க வினைகளாகக் கொண்டு இறைவன் வெவ்வேறு வகையான தூல தேகங்களை உயிர்களுக்குப் படைத்தளிக்கிறான். புல் முதல் மானிடர் ஈறாக உள்ள பிறவி பேதங்களுக்கு இஃதே காரணமாகும். ஒவ்வொரு பிறவியிலும் ஆற்றும் வினைக்கேற்றபடி பிறவிகளில் முன்னேற்றமோ பின்ன டைவோ உண்டாகிறது. இப்படிப் பல்வேறு பிறவிகள் எடுத்தே இறுதியில் உயிர் முத்தியைப் பெறுகிறது. மாயை தன்னளவில் அநாதி. ஆனால் உயிர்க ளோடு பொருந்தும் போது 'ஆகந்துகம்' அதாவது இடையில் வந்தது எனச் சொல்லப்படும். அப்பொழுது உலகாகவும் உடலாகவும் மாயை காரியப்படுவ தால் அதனைக் காரிய மாயை என்று சொல்கிறோம். இக்காரிய மாயையே முதலில் உயிரைப் பொருந்துகிறது. அப்புறம் விருப்பு வெறுப்பு எனப்படும் காரிய வினை பொருந்துகிறது. உமாபதி சிவம் "முற்பால் தனுகரணமும் தந்து மனமுதல் வந்த விகாரத்தால் வினையிரண்டும் காட்டி" எனச் சொல்வதன் மூலம் காரிய மாயை முந்தி என்றும் காரிய கன்மம் பிந்தி என்றும் தெளிவு படுத்துகிறார்.

முப்பத்தாறு தத்துவங்கள்

காரண மாயையை இறைவன் காரியப்படுத்தும் பொழுது முப்பத்தாறு தத்துவங்களாகச் செயற்படுத்துகிறான். மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பூதங்கள் முதல் சிவதத்துவம் ஈறாகத் தத்துவங்கள் முப்பத்தாறாகும். உலகையும், உடலையும் உள் அடக்கி முப்பத்தாறு தத்துவங்கள் சொல்லப்படு கின்றன. நிவர்த்திகலை முதல் ஐந்து கலைகளை வகுத்து அவற்றுள் முப்பத்தாறு தத்துவங்களையும் மந்திரங்களையும் அடக்கித் தீட்சை செய்வது சைவ மரபு.

காரியகன்மப் பலன்கள்

விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் தூல தேகம் பெற்றதும் உயிர்கள் நல்வினை தீவினைகளைப் புரிகின்றன. நல்வினை, புண்ணியம்; தீவினை, பாவம். கீழ்ப் பிறவிகளிலுள்ள உயிர்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்ற வண்ணம் செயல் புரிந்து இன்ப துன்பங்களைப் பெறுகின்றன.. மானிடப் பிறவியைப் பெற்றதும் உயிர்கள் செய்யும் வினை பாவ புண்ணிய அடிப்படையில் நிகழ்கின் றது. பாவத்திற்குத் துன்பமும் புண்ணியத்திற்கு இன்பமும் வரும். இவ்வினை களுக்கு ஏற்றபடி மறு பிறவியெடுக்கும். இப்பிறவியில் செய்யும் வினை 'ஆகாமியம்' எனப்படும். முற்பிறப்புக்களில் செய்யப்பட்டுள்ள வினைகளின் தொகுதி 'சஞ்சிதம்' (தொல்வினை) எனப்படும். இப்பிறப்பில் நாம் அனுபவிப்பதற்காக சஞ்சிதத்திலிருந்து எடுத்துத் தரப்படும் வினைப்பயன்கள்

'பிரார்த்தம்' எனப்படும். இதனையே ஊழ்வினை என்றும் சொல்கிறோம். நாம் திருத்தம் பெறும் வரை இறைவன் ஊழ்வினைப் பயன்களை ஊட்டிப் பிறவிகளைத் தருகிறான்.

சாதனம்

இன்ப துன்பங்களை அனுபவிக்க அனுபவிக்க உயிர்க்கு இறைவனிடத்திலே பத்தி தோன்றும்; நல்லொழுக்கம் நிலைபெறும். நல்லொழுக்கமும் இறைவழிபாடும் ஒரு சேர வளரும் போது உயிர்க்கு அறிவுத் தெளிவு உண்டாகும்.

இறைவழிபாட்டுக்குரிய சாதனமாகச் சைவம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நால்வகை நெறிகளை வகுத்துள்ளது.

கடவுள் எல்லாவற்றையும் கடந்து நிற்கும் நிலை சொரூப நிலையாகும். உயிர்களுக்காகக் கீழிறங்கித் தன் சக்தியால் இறைவன் அருவம், அரு உருவம், உருவம் ஆகிய மூன்று திருமேனிகளைக் கொள்ளுகிறான். உடலால் உருவத் திருமேனிக்குத் தொண்டு செய்வது சரியை ஆகும். கிரியை என்பது இறைவனின் உருவத்திருமேனி, அரு உருவத் திருமேனி ஆகிய இரண்டில் ஒன்றை மந்திரம், கிரியை, பாவனை என்ற முறையால் உடலாலும் மனத்தாலும் வழிபடுவதாகும். யோகம் என்பது மனத்தால் இறைவனின் உருவம், அரு உருவம், அருவம் ஆகிய மூன்று திருமேனிகளில் ஒன்றை வழிபடுவதாகும். சரியை, கிரியை, யோகம் மூன்றையும் திருமேனி பற்றி வரையறை செய்யாது உயிர் பயன்படுத்தும் உடற் கருவிகள் பற்றியே வரையறை செய்தல் வேண்டும். யோகத்தில் உருவத் திருமேனியை வழிபடுவது 'சாலம்ப யோகம்' என்று சொல்லப்படும். ஞானம் இரு வகையாகும். ஒன்று அபர ஞானம்; மற்றொன்று பர ஞானம். சாத்திரங்களின் வழி தத்துவ ஆராய்ச்சி செய்வது அபர ஞானம். சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றையும் செய்து வரும் பொழுது அவற்றிற்கு அங்கமாக இந்தத் தத்துவ ஆராய்ச்சியைச் செய்துவர வேண்டும். அப்பொழுது மலம் நீங்குவதற்குரிய பக்குவம் வரும். இதனை மலபரிபாகம் என்பர். அதன் பின் இன்ப துன்பங்களையும் அவற்றிற்கு காரணமாகிய நல்வினை தீவினைகளையும் ஒப்ப நோக்குதல் எனப்படும் 'இருவினை ஒப்பு' உண்டாகும். அதன் பின் இறைவனின் அருள் வீச்சு (சத்தி நிபாதம்) உயிரின் மீது விழும். இந்நிலையில் இறைவன் சீவன் முத்தர்களை ஆவேசித்தோ, தானே மானிடச் சட்டை போர்த்தியோ குருநாதனாக வந்து பர ஞானத்தை உணர்த்துவான். பர ஞானம் பெற்ற உயிர் இறைவன் திருவருளே கண்ணாகக் கொண்டு அவனை உணர்ந்து பர முத்தி பெறும். இஃதே உயிரின் இறுதிப் பேறாகும்.

பர முத்தி

பர முத்தி என்பது எவ்வகை உடலுமின்றி ஆன்மா பரம வியாபகமாய்ச் சிவத்தோடு இரண்டறக் கலந்து பேரின்பம் நுகர்வதைக் குறிக்கும். இந்த நிலையை அடைந்த ஆன்மா அப்புறம் பிறவியெடுப்பதில்லை. மாறாத பேரின்பத்தில் என்றும் நிலைபெற்றிருக்கும். ஆன்மா சிவானுபவம் அனுபவிக்கும்போது தன்னையும் உலகையும் நோக்கினால் அவ்வனுபவம் தடையுறும். ஆகவே சிவம் ஒன்றையே அறிந்து இன்பம் அனுபவிக்கும் நிலையே பேரின்ப நிலையாகும். இவ்வாறு சிவம் ஒன்றையே அறிந்து நின்றாலும் இன்ப நுகர்ச்சி ஆன்மாவுக்கே ஆதலால் ஆண்டு ஆன்மா உண்டென்பது தெளிவு. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் நித்தியப் பொருட்களாதலால் அவையும் ஆண்டு உண்டு. ஆனால் முத்தியில் அம்மலங்கள் உயிரைப்பாதிக்க முடியாமல் அடங்கி நிற்கும். பெத்தர்களை அவை பாதிப்பதால் அவை என்றும் உண்டென்பது புலனாகும். வியாபகப் பொருளாகிய மலம் பெத்தரிடத்தே நிற்குமென்றும் முத்தரிடத்தே இல்லாமற் போகுமென்றும் சொன்னால் அது வியாபகத்திற்கு இழுக்காகும். ஆகவே "மலம் எங்கும் உண்டு; ஆனால்

முத்தரிடத்தே அதன் ஆற்றல் செல்ல முடியாமல் அது ஒடுங்கி அடங்கிக் கிடக்கும்' எனக் கூறுதல் வேண்டும். சரியை, கிரியை, யோகம் மூன்றிலும் நின்ற உயிர்கள் சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பதவிகளைப் பெற்று அங்கிருந்தவாறோ மீண்டும் பிறந்தோ பரஞான சாதனை செய்து பர முத்தி எனப்படும் சாயுச்சியத்தைப் பெறும். இதுவே சைவ சித்தாந்தம் சொல்லும் முத்தி நிலை பற்றிய கோட்பாடாகும். பர முத்திக்கு மேற்பட்ட பேறு வேறு எதுவும் இல்லை.

புறச் சமயத் தத்துவங்கள்

கடவுளே உயிர்களைப் படைத்தார் எனக் கிறித்தவ சமயம் சொல்கிறது. இந்தியாவில் தோன்றிய மதம் எதுவும் அவ்வாறு சொல்லவில்லை. உயிர்களைக் கடவுள் படைத்தார் என்று சொல்லிவிட்டு அப்புறம் அவை நித்தியமாக இறையின்பத்தில் திளைக்குமென்றும் திருத்தம் பெறாத உயிர்கள் என்றும் மீளாத நரகத்தில் கிடக்குமென்றும் சொல்வது பொருத்தமாக இல்லை. துவக்கமுள்ள ஒன்று அழியவே செய்யும். உயிர்க்குத் துவக்கம் இருந்தால் அதற்கு அழிவு சொல்ல வேண்டுமேயன்றி நித்தியம் சொல்லக் கூடாது. சில உயிர்களுக்கு மீளா நரகம் உண்டென்பது இறைவன் கருணைக்கு ஏற்றதன்று. முற்பிறப்பும் பிற்பிறப்பும் உண்டென்று சைவம் சொல்லுவதற்குக் காரணம் உயிர்கள் பிறந்து பிறந்து என்றாவது ஒரு நாள் திருத்தம் பெற்று இறைவன் கருணையால் அவன் திருவடியை அடையும் என்பதேயாகும். கருணையுடையவன் என்றால் சில உயிர்களை நிரந்தர நரகத்தில் வைப்பது பொருத்தமாகாது.

சமண, பௌத்த மதங்கள் இறைவனைப் பற்றிப் பேசாமல் நம் முயற்சியே நம்மை உய்விக்கும் என்று சொல்கின்றன. நம் முயற்சிக்கு மேற்பட்ட பல ஆற்றல்கள் உலகிடைக் காணப்படுவதால் இறைவன் துணையின்றி நாம் வெற்றி பெற இயலாது. அறம் பயன் தர வேண்டுமென்றால் சடமாகிய அதனை அறிவுப் பொருளாகிய இறைவன் தான் இயக்க வேண்டும்.

சங்கரர் வேதாந்தம் பிரம்மப் பொருள் ஒன்றே உண்மையில் உள்ளது என்றும் உலகமும் உயிரும் வெறும் தோற்றம் என்றும் 'நாமே பிரம்மம்' என உணர்வதே முத்தி என்றும் சொல்கிறது. பிரமப் பொருள் ஒன்றுதான் உள்ளதென்றால் பேரறிவுப் பொருளாகிய அதற்குப் பொய்யாகிய உலகமும் உயிரும் ஏன் தோன்ற வேண்டும்? பொய்த் தோற்றம் உண்டென்றாலே பிரமத்திற்கு அறியாமை உண்டெனக் கொள்ள வேண்டி வரும். பிரமம் பூரண வியாபகம் என்றால் வேறு பொருள் இருக்க நியாயமில்லை என்று சங்கரர் வேதாந்தம் சொல்கின்றது. பிரமம் பேரறிவும் எல்லா வல்லமையும் உடையதாதலால் உயிரோடும் உலகோடும் கலப்பால் ஒன்றாகிப் பொருள் தன்மையால் வேறாகி உயிர்க்குயிராதல் தன்மையால் உடனாகி விளங்குகிறது எனச் சைவ சித்தாந்தம் சொல்லுகிறது. 'அத்து விதம்' என்றால் இரண்டு இல்லாதது என வேதாந்தம் சொல்கிறது. அத்து விதம் என்னும் சொல் உபநிடதத்தில் வருகிறது. அதற்கு 'இரண்டு அல்லாதது' எனச் சைவ சித்தாந்தம் பொருள் கொள்கிறது. கலப்பால் ஒன்றாகவும் பொருளால் வேறாகவும் இருப்பதால் ஒரு கோணத்தில் நோக்க ஒன்று என்றும் மற்றொரு கோணத்தில் நோக்க இரண்டென்றும் கொள்ளத்தக்க நிலையில் பிரமம் இருக்கிறது. இதனாலேயே 'அத்து விதம்' என உபநிடதம் சொல்கிறதென்பது சைவக் கருத்தாகும். பிரமம் பூரண வியாபகம் என்பது உண்மை. ஆனால் அந்தந்தப் பொருளோடும் அது அதுவாகக் கலப்பால் ஒன்றாகி நிற்பதால் பூரண வியாபகம் தடையின்றிச் செல்கிறது. ஆனால் பொருட் தன்மையால் பிரமம் வேறாக விளங்குகிறது. இவ்வாறு சொல்வதால் பிரம வியாபகத்திற்கு இழுக்கில்லாமல் போவதோடு பேரறிவுடைமைக்கும் இழுக்கில்லாமல் போகிறது. சங்கரர் சொல்வது போல பிரமம் மட்டும்தான் உண்டு என்று சொன்னால் வியாபகம் மட்டுமே இழுக்குறாமல் நிற்கும். உலகமும் உயிரும் வெறும் தோற்றம் என்னும் போது

பிரமத்தின் பேரறிவுடைமைக்கு இழுக்கு நேரும்.

விவேகானந்தர் விடை

"பிரமத்திற்கு இவ்வுலகத் தோற்றம் எப்படி உண்டாயிற்று?" என்னும் வினாவிற்குச் சுவாமி விவேகானந்தர், "இவ்வினா பொருளற்றது. மாயையால் இத்தோற்றம் உண்டாகிறது. மாயை இன்னதென மாயைக்குள் இருந்து கொண்டு நாம் விடை சொல்ல முடியாது. மாயை நீங்கியதும் தோற்றமே இல்லையாதலால் அப்பொழுது இந்த வினா எழ இடமில்லை" என விடை யிறுக்கிறார். மாயைக்குள்ளிருந்து கொண்டு பிரமம் ஒன்று தான் உள்ளது என்றும் வேறு பொருள் இல்லையென்றும் சொல்ல முடியும் போது, மாயை இன்னதென்றும் பிரமம் எவ்வாறு அதனால் பாதிக்கப்பட்டது என்றும் சொல்ல முடியாதா? மாயை நீங்கியதும் தோற்றம் இல்லையாதலால் இவ்வினா எழ இடமில்லையென்று மாயைக்குள்ளிருந்து தானே சொல்லுகிறோம்? தோற்றம் நீங்கிவிடும் என்பதை மாயை நீங்கு முன்னரே மாயையினுள் இருந்து கொண்டு சொல்ல இயலும் போது தோற்றம் ஏன் உண்டாயிற்று என்று சொல்ல இயலாதா? வினாவிலிருந்து தப்புவதற்காக "இவ்வினா பொருளற்றது" எனச் சொல்வது பொருந்தாது. "அநுபூதியால் சொல்கிறோம்" என வேதாந்திகள் சொல்வதுண்டு. சைவ சித்தாந்தமும் அநுபூதியை அடிப்படை யாகக் கொண்டதாகும். ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய அநுபூதிமான்களின் வாக்கை அடிப்படையாகக் கொண்டே சைவ சித்தாந்தம் எழுந்துள்ளது. மெய்கண்டாரும், அருணந்தி சிவமும், உமாபதி சிவமும் அநுபூதி பெற்றவர்கள். தமக்கு முன்னிருந்த அருளாளர்களாகிய ஞானசம்பந்தர், அப்பர் முதலியோரின் அனுபவ ஞானத்தையும் தம் அனுபவ ஞானத்தையும் கலந்து சாதனையில் புக நினைப்போர் குழப்பம் அடையாதி ருக்க வேண்டுமென்பதற்காக முதலில் அறிவு நிலையில் சித்தாந்தத்தைச் சாதித்துப் பின்னர் அநுபூதி பற்றிப் பேசியிருக்கிறார்கள். "நாமே பிரமம்" என்பது வேதாந்தக் கோட்பாடு. நாம் பிரமமாக இருந்தால் இவ்வாறு துன்பங்கள் அடைய மாட்டோம். முத்தியில் அவனோடு வேறறக் கலந்து நிற்பது பற்றி "என்னைச் சிவமாக்கினான்" என மாணிக்கவாசகர் கூறுகிறார். அப்பொழுதும் "எனை அவன் ஆண்டான்" எனச் சொல்லுகிறார். ஆகவே சங்கரர் வேதாந்தம் உண்மை நிலைக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. இறைவன் என்றும் இறைவனே; நாம் அவனைச் சரண் அடைந்து பேரின்பம் பெறலாமே அன்றி நாம் அவனாக முடியாது.

பரந்த மனப்பான்மை

சைவம் ஒவ்வொருவரும் அவரவர் பிறந்த சமயத்தில் உறைப்பாக நிற்பதைப் பாராட்டுகிறது. அவரவர் பிறந்த சூழ்நிலைக்கேற்ப மன உணர்வுகள் அமையும். அவ்வுணர்வுகளுக்கு ஏற்றவாறு தாம் பிறந்த சமயத்தில் சொல்லப் படும் அற ஒழுக்கங்களையும் வழிபாடுகளையும் பின்பற்றினால் உள் மன உணர்வு சிறந்து விளங்கும். அப்பொழுது யாவர்க்கும் பொதுவாக உள்ள இறைவன் உண்மையை உணர்த்தி அவர்களை உய்விப்பான் என்பது சைவ சமயக் கோட்பாடாகும். "வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கில் விளங்கு பரம் பொருளே நின் விளையாட்டல்லால் மாறுபடும் கருத்தில்லை" என்பது தாயுமானார் வாக்கு. சமயங்களில் வேறுபாடு உண்டு; ஆனால் மாறுபாடு இல்லை. உயிர்கள் கெட்டுப் போக வேண்டுமென்று எந்தச் சமயமும் சொல் லவில்லை. உய்வதற்காகவே பல்வேறு மார்க்கங்களைச் சொல்லியிருக்கின் றன. இதனால்தான் வேறுபாடு இருந்தும் மாறுபாடு இல்லையெனத் தாயுமா னார் கூறினார்.

வேற்றுச் சமயக் கருத்துக்களைச் சகிப்புணர்வோடு தாங்கிக் கொண்டு எல்லாச் சமயத்தவரோடும் அன்போடு பழக வேண்டும் என்றும் அவரவர்

பிறந்த சமயத்தில் அவரவர் உறுதியோடு நிற்பதைப் பாராட்ட வேண்டுமென் றும் சைவம் சொல்வதால் அது பரந்த மனப்பான்மையுடையது என்பது தெளிவு.

எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே — -திருமந்திரம்

சிவச் சின்னங்கள்

முரு பழ இரத்தினம் செட்டியார்

சிவச் சின்னங்கள் என்பதற்குச் சிவ அடையாளங்கள் என்று பொருள். ஒவ்வொரு நாட்டிற்கும் சின்னங்கள் உண்டு. ஒவ்வொரு கழகத்திற்கும் சின்னங்கள் உண்டு. இதுபோல, ஒவ்வொரு சமயத்திற்கும் சின்னங்கள் உண்டு. கொள்கையை அறிவிப்பதே சின்னங்களின் தலையாய நோக்கமாகும். சைவ சமயத்தவர் தம் சமயத் தத்துவத்தையும், சமய ஒழுக்கத்தையும் நினைவூட்டிக் கொள்வதற்கும், பிறர்க்கு அறிவிப்பதற்கும், திருநீற்றையும் உருத்திராக்கத்தையும் சின்னங்களாகப் பயன்படுத்துகின்றனர். இவை இரண்டும் சிவச் சின்னங்கள் என்று சொல்லப்படும்.

சமயத் தத்துவம்

சைவ சமயத் தத்துவம் யாது? இறை, உயிர், தளை மூன்றும் அதாவது கடவுளும் உயிர்களும் பாசமும் நித்தியமானவை என்பது சைவ சமயத் தத்துவம். திருநீற்றை நெற்றியில் மூன்று விரல் அளவில் பூசுவது திரிபுண்டரம் என்று கூறப்படும் . முப்பொருளும் அநாதி நித்தியம் என்பதை அது குறிக்கும்.

சங்கர வேதாந்திகள், சாம்பலாகிய திருநீறு உலக நிலையாமையையும் உடம்பு நிலையாமையையும் உணர்த்தும் என்று திருநீற்றுக்குத் தத்துவ விளக்கம் சொல்கின்றனர். "முடிசார்ந்த மன்னரும், முடிவிலொரு பிடி சாம்பராகுவர்" என்னும் பட்டினத்தார் வாக்கையும் இதற்குச் சான்றாக எடுத்துக்கூறுவர்.

சைவம், திருநீற்றை மங்கலமாகக் கொள்கிறது. திருநீறு என்பதற்குச் "செல்வம்" என்று ஒரு பொருள் உண்டு. பாக்கியமாவது நீறு, காணத்தகுவது நீறு, பூச இனியது நீறு, கவினைத் தருவது நீறு, சுந்தரமானது நீறு, என்று ஞானசம்பந்தப் பெருமான் திருநீற்றுப் பதிகத்தில் முழக்கம் செய்திருக்கின்றார். இதனால் திருநீறு நிலையாமையை உணர்த்துகிறது, அது அமங்கலப் பொருள் எனக் கொள்வது சைவ அருளாளர்களின் கருத்தன்று என்பது இனிது புலனாகும். நிலையாமையை அருளாளர்கள் முற்றிலும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் திருநீறு அதற்காகப் பூசப்படுவதன்று.

சமணர்கள் ஞானசம்பந்தப் பெருமான் இருந்த மடத்தில் தீயிட்டனர். ஆனால் அது பலிக்கவில்லை. இந்நிகழ்ச்சியைச் சொல்ல வந்த சேக்கிழார் "பூதிசாதனர் மடத்தில் தாம் புனைந்த சாதனைகள் சாதியா வகை கண்டு அமண் குண்டர்கள் தளர்ந்தார்" எனக் கூறுகிறார்.

எந்தப் பொருளையும் தீயிட்டு அழித்து விடலாம். ஆனால் திருநீற்றைத் தீயிட்டு அழிக்க முடியாது. தீயிட்ட பின்னரும், திருநீறு அழியாமலே இருக்கும். இதனையே பூதி சாதனம் உடையார் மடத்தில் சாதியா வகை எனச் சேக்கிழார் தம் பாடலில் குறிப்பாக உணர்த்தி இருக்கிறார். திருநீறு நித்தியமானது என்பது இதன் கருத்து. நிலையாமையை உணர்த்துவதற்கு மாறாகத் திருநீறு நித்தியத்துவத்தை உணர்த்துகிறது. இறைவனும் உயிர்களும் பாசமும் நித்தியம் என்பது சைவக் கோட்பாடு. ஆதலால், மூன்று கோடு அளவாக இடும் திருநீறு இத்தத்துவத்தை உணர்த்துகிறது என்பது தான் பொருத்தமாகும். நித்தியம் என்பது மங்கலம். திருநீறு மங்கலப் பொருள் உடையது. நாம் நாடோறும் மங்கலப் பொருள் உணர்விலேயேதான் அதனை அணிகிறோம். திருமணத்தின் போதும், நோயுற்ற போதும், பயணம் செல்லும் போதும்

திருநீறு அணிவது நம் மரபாகும். அமங்கலப் பொருள் தருவது திருநீற்றின் கருத்தாக இருந்தால், இந்நிகழ்ச்சிகளின் போது திருநீறு அணிவது பொருந்துமோ? மரண வீட்டிலும், துக்கத்தை மங்கலமாக்குவதற்காகவே திருநீற்றைப் பயன்படுத்துகிறோம். பிணத்திற்குத் திருநீறு இட்டு மங்கலமாகவே அதனை வழியனுப்புகிறோம்.

சமயக் குறிக்கோள்

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் சுட்டெரித்துச் சிவானந்தத்தைப் பெறுவது சைவ சமயக் குறிக்கோளாகும். பசுவின் சாணம், மலத்திற்கு அறிகுறி. அதனை நெருப்பிலிட்டுச் சுடுவது, ஞானத்தீயால் மும்மலங்களையும் சுட்டெரிப்பதை உணர்த்தும். திருநீற்றிலிருந்து வீசும் வெண்ணிற ஒளி, தூய சிவானந்தப் பேற்றைக் குறிக்கும். திருநீற்றைத் திரிபுண்டரமாக நெற்றியில் இடுவது இக்குறிக்கோளை உணர்த்தி நிற்கிறது. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்கள் தாம் எழுதிய 'சைவ வினா - விடை'யில், "ஞானாக்கினியால் தகிக்கப்பட்ட மல நீக்கத்தில் விளங்கும் சிவத்துவப் பேற்றுக்குத் திருநீறு அறிகுறியாகும்" என இக்கருத்தையே கூறியிருக்கிறார்.

சமயப் பேறு

சிவனோடு இரண்டறக் கலந்து பேரின்பத்தை அனுபவிப்பதே சைவ சமயப் பேறாகும். இவ்வனுபவத்தை மும்மலங்களும் தடை செய்கின்றன. அம்மலங்களைச் சுட்டெரித்துச் சிவனோடு இரண்டறக் கலக்கும் தூய நிலையை உத்தூளனமாகப் பூசும் திருநீறு குறிக்கும். திரிபுண்டரம் நித்தியத்துவத்தை உணர்த்துவது போல உத்தூளனம் இரண்டறக் கலத்தலை உணர்த்தும். திருநீற்றை நீரில் குழைக்காமல் அப்படியே எடுத்து நெற்றியில் பரவலாகப் பூசுவது உத்தூளனம் எனப்படும். மணிக்கட்டுகளிலிருந்து தோள்வரை நேர்கோடாக இழுத்தும், கழுத்திலிருந்து அடிவயிறு வரை இழுத்தும் திருநீற்றைப் பூசுவதும் உத்தூளனம் எனப்படும். உடம்பில் பொதுவாக திருநீற்றைப் பரவலாக எவ்விடத்தில் பூசினாலும், அது உத்தூளனம் என்றே கூறப்படும். "மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்" என்னும் தேவாரம் இதனைக் குறிக்கும்.

சிவனோடு இரண்டறக் கலக்கும்போது எல்லை இல்லதோர் பேரின்பம் உண்டாகுமாதலால், அந்நிலையும் மங்கலமேயாகும். இதனாலேயே இல்லறத்தார், துறவறத்தார் இருவருமே திருநீற்றை உத்தூளனமாகப் பூசுகின்றனர்.

திரு நீறு பூசும் முறை

தீட்சை பெற்றவர், திருநீற்றை நீரில் குழைத்து மூன்றுவிரல் அளவாகச் சந்தியா காலம் மூன்றிலும் தரிக்கலாம். ஏனை நேரங்களில், நீரில் குழைக்காமல் திரிபுண்டரமாகவோ, உத்தூளனமாகவோ பூசலாம். தீட்சை பெறாதவர், காலை நேரத்தில் மட்டுமே, நீரில் குழைத்துத் திரிபுண்டரமாக இடலாம். ஏனை நேரங்களில், நீரில் குழைக்காமல், திரிபுண்டரமாகவோ, உத்தூளனமாகவோ பூசலாம். நீரில் குழைத்தால், எப்போதும் திரிபுண்டரமாகவே இடவேண்டும். நீரில் குழைக்காவிட்டால், இரு வகையாகவும் இடலாம். இதில் இல்லறத்தார், துறவறத்தார் எனும் வேறுபாடில்லை.

திருநீற்றைப் பட்டுப் பையிலோ சம்புடத்திலோ மடலிலோ வைத்திருக்க வேண்டும். திருநீறு பூசப் போகும் பொழுது குளித்தோ, கால்கை முகம் கழுவியோ செல்லவேண்டும். திருநீற்றைக் கையால் எடுக்கும் பொழுது, வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று "சிவ சிவ" அல்லது "சிவாய நம" என்று வாயினால் கூறி, அண்ணாந்து வலது கையின் நடுவிரல் மூன்றினாலும் திரிபுண்டரமாகவோ, உத்தூளனமாகவோ தரித்தல் வேண்டும்.

ஒரு விரலால் எடுத்துச் சிறிய கோடாகவோ பொட்டாகவோ இடுதல் கூடாது. ஞான சம்பந்தப் பெருமானுக்குத் திருநீறு இடும்போது, "நெற்றியில் நீற்றை நிறுத்தி நிறைவித்தார்" என்று சேக்கிழார் பெருமான் கூறுகிறார். திருநீறு வியர்வையால் அடிக்கடி அழிந்துபோகும். எனவே, திருநீற்றுப் பையிலிருந்து இடையிடையே எடுத்து எப்பொழுதும் நெற்றியில் திருநீறு இருக்கும் வண்ணம் பூசவேண்டும். இதனையே சேக்கிழார், "நிறுத்தி" என்னும் சொல்லால் குறிக்கிறார். ஒற்றை விரலால் எடுத்துக் கோடாகவோ பொட்டாகவோ இடாது நெற்றி முழுவதுமாகப் பூசவேண்டும் என்பதை "நிறைவித்தார்" என்னும் சொல்லால் குறிக்கிறார்.

சிங்கப்பூர்ச் சூழ்நிலையில் எப்போதும் திருநீற்றை நெற்றியில் இட்டுச் செல்ல இயலாது எனக் கூறுவோர் பலர் உண்டு. பல இனத்தவர் வாழுகின்ற நகரில் இது தொல்லையாக இருக்கும் என அவர்கள் கருதுகின்றனர். இதே நிலை, மங்கையர்க்கரசியார்க்கும் ஏற்பட்டது. பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியார் தம் கணவன் சமண சமயம் புகுந்ததால் வெளிப்படையாக நெற்றியில் திருநீறு பூசமுடியவில்லை. திருநீற்றை நெஞ்சில் பூசி முந்தானையால் மறைத்து விடுவது அவள் வழக்கம். இதனை ஞான சம்பந்தப் பெருமான்,

> முத்தின்தாழ் வடமும் சந்தனக் குழம்பும் நீறும்
> தன் மார்பினில் முயங்கப்
> பத்தி செய்தார்கின்ற பாண்டிமாதேவி

எனக் கூறியருளியிருக்கிறார். இதுபோலச் சிங்கப்பூர் மக்கள், எப்பொழுதும் தம் மார்பினில் திருநீற்றைப் பூசிச் சட்டையிட்டுக் கொண்டுவிட்டால், தொல்லை இல்லை. ஆனால் திருக்கோயிலுக்குச் செல்லும் போதும் வீட்டில் வழிபாடு செய்யும்போதும், திருமணம், பிறந்தநாள் போன்ற நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போதும், அவர்கள் அவசியம் தம் நெற்றியில் வெளிப்டையாகத் திருநீறிட்டுத் தம் சமயப் பண்பாட்டை உணர்த்தவேண்டும்.

மற்றொன்றையும் சிங்கப்பூர் மக்கள் கவனிக்க வேண்டும். குடும்பத்தில் உள்ள அனைவருமே படுக்கைவிட்டு எழுந்ததும் அவசியம் திருநீறு தரித்தல் வேண்டும். அதன்பின், பல் விளக்கிக் குளித்ததும், திருநீறு தரித்தல் வேண்டும். வழிபாடு செய்யும் பொழுதும், உணவு உண்ணச் செல்லும் பொழுதும், உறங்கச் செல்லும் பொழுதும் நெற்றியில் திருநீறு இருத்தல் வேண்டும். இதனைத் தத்தம் வீடுகளில் செய்வதால் எவ்விதத் தொல்லையும் இல்லை. இது குழந்தைகளும் சைவச் சூழ்நிலையில் வளர வழிசெய்யும். சமயச் சுதந்திரம் உள்ள சிங்கப்பூர் நாட்டில் இதனைப் பின்பற்ற யாரும் தயங்கக் கூடாது; தயங்கவேண்டிய அவசியமும் இல்லை.

படுக்கைவிட்டு எழுந்ததும், பல் விளக்காமலும், குளிக்காமலும், திருநீறு பூசலாமா? எனச் சிலர் ஐயுறலாம். நாம் ஏற்கனவே கூறியவாறு, திருநீறு மங்கலப் பொருளாதலால், அதற்குத் தீட்டு இல்லை. வாய் கொப்பளித்து முகம் கழுவித் திருநீற்றைப் பூசலாம். காலையில் எழுந்ததும் இவ்வாறு பூசவேண்டுவது அவசியமாகும்.

நெற்றியில் திருநீற்றை மூன்று விரல் அளவாக இடும் போது, வளையாமலும், இடையறாமலும் ஒன்றையொன்று தீண்டாமலும் மிக அகலாமலும் இருக்குமாறு தரித்தல் வேண்டும். நீரில் குழைத்து இடும்போது, நெற்றியில் இரண்டு கடைப்புருவ நீளமும், மார்பிலும் புயங்களிலும் இடும்போது ஆறு அங்குல நீளமும், மற்ற இடங்களில் ஒவ்வோர் அங்குலமும் இருக்குமாறு திருநீறு தரித்தல் வேண்டும். வழிபாட்டிற்குப் புகும் போது திருநீற்றை நீரில் குழைத்துத் தலை உச்சி, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள், புயங்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து என்னும் பதினாறு இடங்களிலும் தரித்தல் வேண்டும். இது நம் வாழ்க்கையில் நாம் பதினாறு வகைப் பேற்றையும் பெறவேண்டும் என்பதைக் குறிக்கும். இதனாலும் திருநீறு மங்கலப்பொருள் என்பது இனிது புலனாகும்.

திருநீற்றைப் பசுவின் சாணத்தைக்கொண்டு தூய முறையில் தயாரித்தல் வேண்டும். எப்போதும் திருநீறு வெண்ணிறமாகவே இருத்தல் வேண்டும்.

வடக்கு அல்லது கிழக்கு நோக்கித் திருநீற்றைப் பூசுவதற்குக் காரணம் உண்டு. இப்போதைய இந்தியாவுக்கு வடக்கில் கைலை மலையில் சிவபெருமான் வீற்றிருப்பதாக நம் புராணங்கள் சொல்லும். ஞாயிறு கிழக்கே உதயம் ஆவதால் நாள் முழுதும் மங்கலம் பெருக அத்திசையை நோக்கியும் திருநீறு இடுதல் வழக்கம்.

ஞானசம்பந்தப் பெருமான், "பராவணம் ஆவது நீறு" என்று சொல்லியிருக்கிறார். "பராவணம்" என்றால் திருவருட்சக்தி என்று பொருள். இறைவனின் திருவருளை நினைவூட்டிக்கொள்வதே திருநீற்றைப் பூசுவதின் தலையாய கருத்தாகும்.

சமய ஒழுக்கம்

"பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" என்பது சேக்கிழார் வாக்கு. திருநீற்றை மூன்றுவிரல் அளவில் பூசும் போது, முதற்கோடு உள்ளத் தூய்மையையும், இரண்டாவது கோடு வாக்குத் தூய்மையையும், மூன்றாவது கோடு உடல் தூய்மையையும் குறிக்கும். இதனை "திரிகரண சுத்தி" எனச் சாத்திரம் கூறும்.

பொறாமை, வஞ்சகம் முதலியவற்றை நீக்கி அன்பு, அடக்கம் முதலியவற்றைக் கைக்கொள்வது உள்ளத்தூய்மையாகும். பொய்மை, கடுஞ்சொல், புறம் கூறல், கோள்மூட்டுதல் முதலியவற்றை நீக்கி, வாய்மை, இன்சொல் முதலியவற்றைக் கைக்கொள்வது வாக்குத் தூய்மையாகும். மதுவருந்தல், போதை மருந்து உண்ணுதல், புலால் உண்ணுதல், பிறன் மனைவியை விரும்புதல், வேசிகளிடத்தே செல்லுதல் முதலியவற்றை நீக்கிப் புலன் அடக்கத்தோடு குளித்துத் தூய ஆடை அணிந்து எப்போதும் அழுக்கற்று வாழ்தல் உடல் தூய்மையாகும்.

இம்மூன்று தூய்மையையும் கடைப்பிடித்தல் சைவ சமயக் குறிக்கோள் என்பதை மூன்று விரல் அளவினதாகிய திருநீறு உணர்த்துகிறது. இத்தகைய கருத்தை உணர்த்தும் ஒரு சின்னம், வேறு சமயங்களில் காணப்படவில்லை. இத்தகைய கருத்து திருநீற்றில் இருப்பதால்தான், நற்குண உணர்வுகள் நம் உள்ளத்தில் தாமே எழுகின்றன. திருநீற்றை அணிந்துகொண்டு கொலை, களவு, வன்முறை முதலியவற்றில் ஈடுபடுவோர் மிக மிகக் குறைவு. திருநீற்றை அணிந்தவுடன் இத்தகைய எண்ணங்கள் பெரும்பாலும் தோன்ற மாட்டா. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் திருநீறு சத்திய வாழ்க்கையை நாம் பின்பற்ற வேண்டும் என்பதை அறிவுறுத்தும் அறிகுறியாகும்.

ஜாதி வேறுபாடு

சைவ சமயத்தவர், தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், ஏனை நாடுகளிலும் ஜாதி உணர்வு உடையோராக இருப்பதைக் காண்கிறோம். நம் அருளாளர்கள், இந்த ஜாதி வேற்றுமையை ஒழிப்பதற்குத் திருநீற்றை ஒரு சாதனமாகக் கொண்டனர். யார் திருநீறு இட்டிருந்தாலும், "அவர் நம் உடன் பிறந்தவர், நம் சமயத்தவர், சிவனடியார்" எனக்கொண்டு, அவர்க்கு உரிய மதிப்பளிக்க வேண்டுமெனத் திருமுறைகளில் அருளாளர்கள் பேசியுள்ளனர். ஒழுக்கமில்லாதவர் திருநீறிட்டு வந்தால், அவரை ஏற்றுக்கொள்ளலாமா? எனச் சிலர் வினவுவது உண்டு. யாராயிருப்பினும் அவர் திருநீறு இட்டிருந்தால், அவர் நம் சமயத்தார் என ஏற்று, அவர் திருந்துமாறு அறிவுறுத்த வேண்டும்.

நரசிங்க முனையரையர் என்னும் நாயனார் யார் திருநீறிட்டு வந்தாலும் அவரின் ஜாதி, ஒழுக்கம் முதலியவற்றைப் பாராமல் நூறு பொன் வழங்கி வந்தார். ஒரு சமயம் அவரிடம் மிக அருவருப்பான தோற்றத்தோடு ஆனால் திருநீறிட்டுக் கொண்டு ஒருவர் வந்தார். அவரைக் கண்டதும், நரசிங்க முனையரையரோடு இருந்த அனைவரும் அவரை இகழ்ந்து ஒதுங்கினர்.

நரசிங்க முனையரையரோ அவரை அன்போடு ஏற்று இருநூறு பொன் வழங்கினார். வழக்கமாக நூறு பொன் மட்டுமே கொடுக்கும் அவர், இருநூறு பொன் ஏன் கொடுத்தார் என்பதைச் சேக்கிழார் பின்வருமாறு விளக்குகிறார்.

சீலம் இலரே எனினும் திருநீறு சேர்ந்தாரை
ஞாலம் இகழ்ந்து அருநரகம் நண்ணாமல் எண்ணுவான்
இரட்டிப் பொன் கொடுத்து விடைகொடுத்தார்

திருநீறு அணிந்தவர்களை யாரேனும் இகழ்ந்தால் அவர் நரகு செல்வார் என நாயனார் அஞ்சினார். தன்னைச் சூழ்ந்திருந்தோர் நரகம் செல்லாமைப் பொருட்டு அவர்களுக்காக அபராதமாக நூறு பொன் அளித்தார். இதிலிருந்து யார் திருநீறு இட்டிருந்தாலும் அவரைக் கீழ் ஜாதியினர் எனக் கருதி ஒதுக்கினால் நரகம் கிட்டும் என்பது நம் அருளாசிரியர்களின் கருத்தாகிறது. ஆகவே, திருநீறு, ஜாதி வேற்றுமையை ஒழிப்பதற்குச் சிறந்த சாதனமாகும்.

திருநீற்றின் பயன்

திருநீற்றில் மந்திரங்களை உருவேற்றி அணிந்து கொள்ளக் கொடுத்தாலும், நீரில் இட்டு உண்ணுமாறு கொடுத்தாலும் நஞ்சும், நோயும், துன்பமும் நீங்கும் என்பது நம் சமயக் கொள்கையாகும். பாண்டியனின் வெப்பு நோயைத் திருநீறிட்டே ஞானசம்பந்தர் நீக்கினார். இன்றும், தமிழ்நாட்டில் ஏனைச் சமயத்தினர் கூடத் திருநீறு மந்திரித்துக் கொடுப்பதைக் காண்கிறோம். திருநீற்றுக்குப் பகைவரான சமணர் கூடத் திருநீறு பாம்புக் கடியின் நஞ்சை நீக்குமென நம்பியிருக்கின்றனர். இதனை நாலடியாரில் சமண முனிவர் "இடு நீற்றால் பையவிந்த நாகம் போல்" எனக் குறிப்பிடுகிறார். திருநீறு மிக எளிய சாதனம். யாவரும் பயன்படுத்தக் கூடியது. சைவ சமயத்தவர் அனைவரும் அதனைப் பயன்படுத்த வேண்டுவது மிக அவசியமாகும்.

திருவருட்பேற்றைத் திருநீறு எப்பொழுதும் நினைவூட்டிக் கொண்டே இருப்பதால் நாம் அதனை நாள்தோறும் பயன்படுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்: "ஒரு சின்னம்தானே?" என்று அலட்சியமாக அதனைப் புறக்கணிக்கக் கூடாது. ஒரு நாட்டின் கொடியை வெறும் சின்னம் தானே என்று அவமதித்தால், அரசாங்கம் தண்டிக்கும். புறச் சின்னத்திற்கு நாம் மதிப்பளித்தால் தான் உள் உணர்விலும் உயர்ந்த கருத்துக்கள் நிலைக்கும். நமக்குச் சமய உணர்ச்சி இருக்க வேண்டுமென்றால், கட்டாயம் திருநீறணிந்தே ஆக வேண்டும்.

குங்குமமும் சந்தனமும்

சைவ சமயத்திற்குத் திருநீறுதான் தலையாய சின்னமாகும். குங்குமமும் சந்தனமும் திருநீற்றுக்குத் துணையே ஆகும். திருநீறு இல்லாது இவற்றை இடக்கூடாது.

குங்குமம், சாத்த மதத்திற்குத் தலையாயது. சைவ சமயத்தில் அது துணையாகத்தான் கொள்ளப்படுகிறது. திருவருள் ஆற்றலால் எல்லாம் நடைபெறுகிறது என்பதை உணர்த்தவும் திருவருள் மங்கலமானது என்பதை அறிவுறுத்தவும் திருநீற்றோடு துணையாகக் குங்குமத்தை அணிகிறோம்.

சந்தனம், இறைவனின் திருவருள் மிகவும் தண்மையானது என்பதை அறிவிக்கிறது. அதனை உடலில் பூசுவதன் வாயிலாகத் திருவருள் இன்பம் எவ்வாறு இருக்கும் என்பதை உணர்கிறோம். எனினும் திருநீறு ஒன்றே இக்கருத்துக்கள் அனைத்தையும் உணர்த்துவதால், அஃதே சைவ சமயத்தின் முடிமணியாக விளங்குகிறது.

சேரன் செங்குட்டுவன் போருக்குச் செல்லும்போது பெருமாள் கோயிலிலிருந்து பிரசாதம் அளித்தனர். ஆனால் அவன் தன் முடியில் திருநீறு அணிந்திருந்ததால் பெருமாள் பிரசாதத்தைத் தோளில் அணிந்து கொண்டான். இதனைச் சிலப்பதிகார ஆசிரியர்

தெண்ணீர்ச்கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி அணிதலின்
ஆங்கது வாங்கி அணிமணி புயத்துத் தாங்கினன்

என்று கூறுகிறார். இங்கே திருநீற்றைச் "சேவடி" என அவர் சொல்வது சிந்திக்கத் தக்கது. சிவபெருமானின் திருவடியாகத் திருநீறு தெரிகிறது. திருநீற்றைத் தலையில் அணிந்து கொள்வது, அவன் திருவடியை நம் தலையில் தரித்துக் கொள்கிறோம் என்பதை உணர்த்தும்.

உருத்திராக்கம்

சைவ சமயத்தார் தம் கழுத்தில் அணிந்து கொள்ளுகின்ற உருத்திராக்கம் மற்றொரு சைவச் சின்னமாகும். இரக்கத்தின் அறிகுறியாக உருத்திராக்கம் உருவாகியது என்பது புராணங்கள் கூறும் கருத்து. திரிபுரத்து அசுரர்கள் தம்மை மிகவும் துன்புறுத்திய போது தேவர்கள் சிவபெருமானிடம் வந்து முறையிட்டனர். அவர்களின் துன்பத்தைக் கேட்டபோது, சிவபெருமான் கண்களிலிருந்து நீர்த்துளிகள் சிதறின. அவையே உருத்திராக்கம் ஆயின. இவ்வாறு சைவ புராணங்கள் உருத்திராக்கத் தோற்றத்தை நமக்கு விளக்குகின்றன. பிறர் துன்பங்காணும் பொழுது, அவர் பொருட்டு நாம் இரங்கல் வேண்டும் என்பதையே உருத்திராக்கம் உணர்த்தும்.

சைவ சமயத்தின் அடிப்படைத் தத்துவம் கருணையாகும். "எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்று அது சொல்கிறது. கருணைக்கு மேற்பட்ட ஓர் அறம் இல்லையாதலால் அதனை உணர்த்துகின்ற உருத்திராக்கம் மிகச் சிறந்த சின்னமாகும். திருநீறணிந்து கொண்டு, சிலர் புலால் உண்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் உருத்திராக்கம் அணிந்து கொண்டு புலால் உண்போர் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம்.

திருக்குறளில், பொய்யாமையும், கொல்லாமையும் மிகச் சிறந்த அறங்களாகக் கூறப்பட்டுள்ளன. பொய்யாமையை உணர்த்துவது திருநீறு; கொல்லாமையை உணர்த்துவது உருத்திராக்கம்.

சமய அடிப்படை

அறத்தின் அடிப்படையில் உருத்திராக்கம் கருணையைக் காட்டி நிற்பதைக் கண்டோம். சமயத்தின் அடிப்படையில், அது சிவபெருமானிடத்து நாம் செலுத்தும் அன்பினைக் காட்டி நிற்கிறது. தரிசனங்களில், இறைவனை யோக முயற்சியால் அடையலாம் என்றும், ஞான விசாரணையால் அடையலாம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் சைவ சமயம் அன்பு ஒன்றினால் தான், அதாவது பக்தியால்தான் அவனை அடையலாம் என்று சொல்கின்றது. "ஞானம் என்பது ஈசன்பால் அன்பே" எனச் சேக்கிழார் கூறுகின்றார். "பக்தி நெறி அறிவித்து" என மணி வாசகர் பேசுகிறார். "அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி என் பொன் மணியினை எய்த வொண்ணாதே" எனத் திருமூலர் தெரிவிக்கின்றார். சைவம், அன்பு ஒன்றினால்தான் இறைவனை அடையலாம் என்பதை உருத்திராக்கம் அணிவதன் வாயிலாக உலகிற்கு உணர்த்துகிறது.

உருத்திராக்கம் அணியும் முறை

திருநீறு அணிவது போல உருத்திராக்கத்தையும் எப்போதும் அணிய வேண்டும். ஆனால் நடைமுறையில் இது பலருக்குச் சாத்தியமாக இல்லை. சிவ வழிபாடு செய்யும் போது இதனை அணிந்து கொண்டால், அன்பினால் தான் சிவப்பேறு பெறலாம் என்பதை அது நினைவூட்டிக் கொண்டிருக்கும். திருமுறைகள் ஓதும் போதும் உருத்திராக்கம் அணிவது சிறப்பு. திருமுறைக்கு மூலம், அன்பே என்பதை அது காட்டும். குளிக்கும் போது உருத்திராக்கம் அணிந்து கொண்டால் அது உடல் நலனை மிகுவிக்கும்.

உருத்திராக்கத்தில், ஒரு முகம் முதல், பதினாறு முகம் வரை கொண்ட

மணிகள் உண்டு. உருத்திராக்கம் மரத்தில் விளைவதாகும். உருத்திராக்க மணிகளைப் பட்டுக் கயிற்றிலோ, பொற் கொடியிலோ கோத்துத் தலை, கழுத்து, காது, புயங்கள், கைகள் ஆகியவற்றில் அணிந்து கொள்ளலாம். முகத்தோடு முகமும், அடியோடு அடியும் பொருந்த உருத்திராக்க மணிகளைக் கோத்தல் வேண்டும். நாவலர் பெருமான், உருத்திராக்க மணிகளைப் பின்வருமாறு அணியும்படி கூறுகிறார்: குடுமியில் ஒரு மணி. தலையில் இருபத்து இரண்டு மணி, காதில் ஒரு மணி, கழுத்தில் முப்பத்திரண்டு மணி, புயங்களில் பதினாறு மணி, கைகளில் பன்னிரண்டு மணி; விரும்பினால் கழுத்தில் நூற்றெட்டு மணிகள் கொண்ட உருத்திராக்கமும் அணியலாம்.

திருவைந்தெழுத்து மந்திரம் உருவேற்றும் பொழுது, உருத்திராக்கப் பொடி மணியாக நூற்றெட்டு மணிகளைக் கோத்து ஜபமாலையாக வைத்துக் கொண்டு, ஒவ்வொரு தடவை மந்திரம் சொல்லும் போதும் ஒவ்வொரு மணியை மேல்நோக்கி உருட்டுதல் வேண்டும். மந்திர ஜபத்திற்கு எல்லாச் சமயத்தாருமே, இயற்கை மணிகளையோ செயற்கை மணிகளையோ பயன்படுத்துகின்றனர். சைவ சமயம் மந்திர ஜபத்திற்கு உருத்திராக்க மணிகள் மிக முக்கியமானவை என்று கருதுகிறது.

சிவபெருமானை வழிபடு கடவுளாக நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதற்கு அடையாளமாக உருத்திராக்கம் விளங்குகிறது. அது அவருக்காக "நாம் கட்டிக்கொள்கிற தாலி" என்று ஒரு தமிழ்ப் புலவர் சுவைபடக் கூறுகிறார். "சைவ வாழ்க்கையை நாம் மேற்கொண்டிருக்கிறோம்" என்பதை உருத்திராக்கம் அணிவதன் வாயிலாக உணர்த்துகிறோம்.

சின்னங்களின் இன்றியமையாமை

சின்னங்களைப் பயன்படுத்துவது அவசியமில்லை என இக்காலத்தில் பலர் கூறுவதுண்டு. மனத்தூய்மைதான் முக்கியம் என்றும், புறச் சின்னங்கள் தேவையில்லை என்றும், ஏனைச் சமயத்தவரிடமிருந்து அவை நம்மை வேறுபடுத்திக் காட்டுகின்றன என்றும் வாதிக்கின்றனர்.

புறத்தூய்மை இன்றி மனத்தூய்மை அமையாது. "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்" என வள்ளுவர் புறத்தூய்மையையும் அவசியமாக எடுத்துக் கூறுவது சிந்திக்கத் தக்கது. புறச் சூழ்நிலைகள் நன்றாக அமையாவிட்டால், உள்ளத்தில் தடுமாற்றம் உண்டாகும். திருநீறு, உருத்திராக்கம் முதலியவற்றை அணிந்தவுடன் இயல்பாகவே நம் உள்ளத்தில் ஒரு தூய உணர்வு தோன்றும். ஆகவே, சின்னங்கள் தேவையில்லை என்பது தவறாகும்.

மொழி வேற்றுமை, உணவு வேற்றுமை, நிற வேற்றுமை முதலியன உலகில் என்றுமே இருக்கும். "எல்லாரும் ஒரு மொழியே பேச வேண்டும், எல்லாரும் ஒரு வகை உணவையே உண்ண வேண்டும், எல்லாரும் ஒரே நிறமுடையவராக இருக்கவேண்டும்" என்று நாம் சொன்னால், அது சாத்தியமாகுமா? மொழியாலும் உணவாலும், நிறத்தாலும் வேறுபட்டிருந்தாலும் எல்லாரோடும் நாம் அன்பாகப் பழகக் கடமைப் பட்டிருக்கிறோம். இவற்றை ஒழிக்க வேண்டும் என்று சொல்வதைவிட இவ்வளவு வேறுபாடிருந்தும் ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும் என்று சொல்வதுதான் சிறப்பு. சமய வேற்றுமைகள் உலகில் இருந்ததே தீரும். அவற்றை ஒழிக்க முயல்வது மேலும் குழப்பத்தையே உண்டாக்கும். ஒரு சமயத்தையே அனைவரும் பின்பற்ற வேண்டுமென்று சொன்னால், ஏனைச் சமயத்தவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். Unity in diversity (வேற்றுமையில் ஒற்றுமை) என்பதுதான் இன்றைய நிலையில் நடைமுறைச் சாத்தியமாகும். ஒவ்வொரு சமயத்தவரும் அவரவர் கொள்கைகளையும் சின்னங்களையும் பின்பற்றுவதை மதிப்பதுதான் சிறந்த வாழ்க்கை முறைத் தத்துவமாகும். இதனால் நம் சின்னங்கள் நம்மைப் பிறரிடமிருந்து வேறுபடுத்தும் என்று கருத வேண்டுவ

தில்லை. சிங்கப்பூரில் பல இனத்தவரும் தத்தம் சமய வாழ்க்கை முறைகளைப் பின்பற்ற அனுமதியுண்டு. அதனைச் சிங்கப்பூர் ஒரு பெருமையாகவும் கருதுகிறது. இந்நிலையில் நம் சின்னங்களை நாம் தவிர்க்க வேண்டிய நெருக்கடி எதுவுமில்லை. மேலே கூறியது போல, அலுவலகங்களிலோ, பள்ளிகளிலோ சின்னங்களை அணிவது சிரமமாக இருந்தாலும், நம் வீடுகளிலும், கோயில்களிலும், மங்கல நிகழ்ச்சிகளிலும் விழாக்களிலும் நாம் நம் சமயச் சின்னங்களைத் தாராளமாக அணியலாம்; அணிய வேண்டும்.

சைவ சமய வாழ்க்கைநெறி

முரு பழ இரத்தினம் செட்டியார்

சமய உணர்வோடு வாழ்க்கையை நடத்த விரும்புவோர் அவரவர் சமயம் சொல்கிற ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தே ஆகவேண்டும்.

சைவ சமயம் சிறந்த ஒழுக்கங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டுமெனச் சொல்கிறது. ஆனால் காரிய சாத்தியமில்லாத அறங்களை அது சொல்ல வில்லை. மனித வாழ்க்கை மேம்பட்டு விளங்குவதற்கேற்ற ஒழுக்கங்களையே அது சொல்வதால் வாழ்க்கையோடு ஒட்டாத கொள்கைச் சமயமாக இல்லா மல் அது வாழும் நெறியாகவே அமைந்திருக்கிறது. எனவே சைவ சமய வாழ்க்கை நெறி என்பது நாம் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடித்தொழுக வேண்டிய பண்புகளையும் பழக்க வழக்கங்களையும் குறிக்கும் என அறிதல் வேண்டும்.

இல்லறச் சிறப்பு

இல்லறம், துறவறம் என இருவகை நெறிகள் உண்டு. சைவம் இரண் டையும் ஏற்றுக்கொள்கிறது. ஆனால் இல்லறத்திற்கே அது மிகுந்த ஏற்றம் அளிக்கிறது.

திருக்குறள் சைவப் பிரமாண நூல்களுள் ஒன்றாகும். அதில் வள்ளுவர், "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" எனச்சொல்லியிருக்கிறார். "அறத்தாற் றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில் போய்ப் பெறுவதெவன்?" என வினவுகிறார். "இல்வாழ்க்கையிலேயே எல்லாப் பயன்களையும் பெற முடியும். வேறு நெறிகளில் போய் நீங்கள் என்ன பயன் பெறப் போகிறீர்கள்?" என்பது அவர் வினா. "இல்லறம் அல்லது நல்லறம் அன்று" என்பது ஒளவை வாக்கு.

பதினோராம் திருமுறையில் பட்டினத்தார் "மனைவி மக்களைத் துறக்காமல் இல்லறத்திலிருந்து முத்தியினைப் பெறுவோம்" எனத் தெளிவாகக் கூறியிருக்கிறார். "மலர் தலை உலகில் பற்பல மாக்கள் மக்களை, மனை வியை ஒக்கலை ஒரீஇ" எனப் பாட்டைத் துவங்கி, "யாங்கள் எல்லாம் அங்ஙனம் செய்யாது, அஞ்சொன்மாதர் ஆகம் தோய்ந்தும்" துறவறத்தார் பெறும் "அந்த முத்தியும் இழந்திலம்" என அவர் முடிப்பது சிந்திக்கத் தக்கது.

திருமணம்

ஒவ்வொருவரும் தக்க வயது வந்ததும் திருமணம் செய்து கொள்ள வேண்டும். பெற்றோர் பார்த்துத் திருமணம் செய்து வைப்பது சில காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் ஒரு முறையாகும். ஆனால் தமிழ்ச் சங்க காலத்தி லேயே காதலித்துத் திருமணம் செய்யும் வழக்கம் இருந்திருக்கிறது. சங்க இலக்கியங்கள் இக்காதல் நெறியைச் சிறப்பித்துப் பேசுகின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவை நாச்சியாரைக் காதலித்தார். பரவை நாச்சியாரும் அவரைக் காதலித்தார். பிறகுதான் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. இதனால் காதலித்துத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென இக்கால இளைஞர்கள் சொல்வது சைவ சமயத்தில் நெடுங் காலத்திற்கு முன்னரே பின்பற்றப்பட்டிருக்கிறதென்பது புலனாகும். திருமணத் திற்கு முன் காதலிப்பதைச் சைவம் தடைசெய்யவில்லை. ஆனால் திருமணத் திற்கு முன் அக்காதல் மனத்தளவிலேயே நிற்கவேண்டும் என்றும் உடல்

அளவில் சென்றால் ஆபத்து விளையக்கூடும் என்றும் அஃது எச்சரிக்கை செய்கிறது.

காதலித்த பின்னர் ஆணோ பெண்ணோ மனத்தை மாற்றிக்கொண்டு வேறொருவரைக் காதலிப்பது இருபாலார் கற்புக்கும் பேரிழுக்கு என்று சைவம் சொல்கிறது. ஒருமுறை காதலித்துவிட்டால் மாறவே கூடாது; கட்டாயம் திருமணம் செய்து கொண்டே ஆகவேண்டும். இந்த உறுதிப்பாடு இல்லாமல் விளையாட்டு மனப்பான்மையில் காதல் புரியக்கூடாது என்பது சைவக் கோட்பாடாகும்.

திருமணம் செய்து கொண்ட பின்னர் இருபாலாரும் உண்மையோடு வாழவேண்டும். பிறன்மனையாளை நாடுதல், பொருட் பெண்டிரைக் கூடுதல் ஆகிய இரண்டும் அறவே கூடாது; திருமணத்தின் பின்னர் மனைவியோடு வாழ்வதன் காரணமாக உடல் வேட்கை தணிந்துவிடுமாதலால், அழகுமிக்க பெண்களைப் பார்க்கும் போது மனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது காரிய சாத்தியமே ஆகும். ஒரு பெண்ணுக்கு எத்தகைய சிறப்பு இருந்தாலும் கணவன் அல்லாத பிற ஆடவரை நாடினால் ஒரு சிறப்பும் இல்லாதவளாகி விடுவாள். கற்புடைமை இருபாலார்க்கும் பொதுவே ஆயினும், குழந்தைப் பேறுடைமையால் பெண்களுக்கு அது மிக இன்றியமையாத ஒன்றாக விளங்கு கிறது.

"ஒருவனும் ஒருத்தியும்" என்னும் வரைமுறையைச் சைவம் விதித்திருக் கிறது. ஒருத்திக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால் குடும்ப வாழ்க்கை சீர் குலைந்து போகும். சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றின் வாயிலாக இரு மனைவியரோடு வாழ்வது மிகுந்த தொல்லைக்குரியதென்பதை இறைவன் நமக்கு அறிவித்திருக்கிறான்.

இக்காலத்தில் வாழ்க்கை வசதி பெருகி இருப்பதால் சிங்கப்பூர் போன்ற நகரங்களில் இத்தகைய கட்டுப்பாட்டோடு வாழமுடியுமா என வினவலாம். சிங்கப்பூர் அரசாங்கம் ஒருத்திக்கு மேற்பட்ட மனைவியைத் திருமணம் செய்வதை ஆதரிக்கவில்லை. விபசாரத்திற்கு அழைப்பதைத் தடைசெய்யும் சட்டமும் அமுலில் இருக்கிறது. காரிய சாத்தியமில்லாத சட்டங்களைப் பெரும்பாலும் அரசாங்கம் இயற்றுவதில்லை. மறைமுகமாக நடக்கின்றன என்பதற்காக இவற்றைக் காரியசாத்தியமற்றது என்று கூறி ஒதுக்குவது தவறாகும். பண்புமிக்க வாழ்க்கை நடத்தக் கருதினால் கட்டுப்பாடு இல்லா மல் முடியாதென்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

மணமுறிவு

தகுந்த காரணங்கள் காட்டி மணமுறிவு செய்து கொள்ளச் சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் சைவம் இதனை அனுமதிக்கவில்லை. திருமணத் தின் பின்னர் எத்தனை உடற்குறை ஏற்பட்டாலும் அநுதாப உணர்ச்சியோடு கணவனும், மனைவியுமாக வாழ்ந்தே ஆகவேண்டும் எனச் சைவம் விதிக்கி றது. ஒத்துவராவிட்டால் என்ன செய்வது எனப் பலர் வினவுகின்றனர். விட்டுக் கொடுத்தல், சரி செய்து கொள்ளுதல் என்னும் மனப் பான்மையை வளர்த்துக் கொண்டால் கணவன் மனைவியரிடையே ஒத்துவராத கருத்து வேற்றுமைகள் இருப்பினும் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படமாட்டாது.

பிரான்சு நாட்டுக் குடும்ப அறிவியல் வல்லுநர் வெண்டர் டி வெல்ஸ் என்பவர் இதுபற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: தகராற்றுக்கு முக்கிய காரணம் முரட்டுத்தனம்தான். குடும்ப வாழ்க்கையில் இறைவழிபாடு மிக அவசியம். அவ்வழிபாட்டினால்தான் சத்துவ குணங்களை இருபாலாரும் வளர்த்துக் கொள்ளமுடியும். குடும்ப உறவு பூவிலும் மெல்லியது. சாந்தம், பொறுமை, அமைதி, முதலிய மனப் பண்புகளை வளர்க்காமல் போனதால் தான் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் மணமுறிவுகள் அதிகரித்துவிட்டன. கணவன் மனைவி உறவு உடல் இன்பத்திற்காக மட்டும் ஏற்பட்டதன்று. நல்ல குழந்தைகளைப் பெற்று, உயர்ந்த பண்புகளை அவர்களுக்குப் போதித்து

அறிவும் ஒழுக்கமும் மிக்க குடிமக்களாக ஆக்கி நாட்டுக்கு அளிப்பதற்காகத் தான் திருமணம் என்னும் ஒரு முறை உலகில் உண்டாகியது. உடல் இன்பத் திற்காக மட்டும் என்றால் ஆடுமாடுகள் போலக் கட்டுப்பாடின்றித் திரியலாம். உரிமை என்னும் பெயரால் மேல்நாட்டுக் குடும்பங்கள் கட்டவிழ்த்து விடப்பெற் றமையாலேயே மணமுறிவுகள் பெருகிவிட்டன. மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்றால் மனக்கட்டுப்பாடு அவசியம் வேண்டும்".

வெண்டர் டி வெல்ஸ் சொல்லியிருப்பதற்கு மேல் நாம் ஒன்றும் சொல்ல வேண்டுவதில்லை. சைவம் இல்வாழ்க்கையை மிகப் புனிதமாகக் கருதுவதால் மணமுறிவை அது கடுமையாக எதிர்க்கிறது.

சிங்கப்பூரில் வாழ்கின்ற கத்தோலிக்கக் கிறித்துவப் பெருமக்கள் இன்றும் மணமுறிவை எதிர்க்கின்றனர். அவர்கள் மண முறிவு இல்லாமல் வாழும் போது சைவப் பெருமக்களாகிய நாம் வாழ முடியாதா? எனவே சைவம் விதிக்கும் இக்கோட்பாட்டைக் காரிய சாத்தியமில்லை எனத் தள்ள முடியாது. ஒருவனும் ஒருத்தியுமாக என்றும் வாழ்வதே சிறந்த வாழ்க்கை நெறியாகும்.

மது வகைகள்

சைவம் மது அருந்துவதைப் பஞ்சமாபாதகங்களுள் ஒன்றாக வைத்திருக் கிறது.

சிறந்த குடும்ப வாழ்க்கையைச் சீர்குலைப்பதில் மதுபானம் முக்கிய இடம்பெறுகிறது. எல்லா வகை மதுபானங்களையும் அறவே நீக்க வேண்டும் எனச் சைவம் விதிக்கிறது. இக்காலத்தில் போதை மாத்திரைகள் இளையர் உலகைப் பெரிதும் கெடுத்துவிட்டன. அவற்றை மனத்தால் நினைப்பது கூட ஆபத்தானதாகும்.

புலால் உணவு

புலால் உண்ணாது வாழ்தலைச் "சைவம் பிடித்தல்" என வழக்கத்தில் சொல்கிறோம். இதிலிருந்து புலால் உண்ணாமை சைவத்திற்கு உயிர்நாடியாக விளங்குகிறது என்பது புலனாகும். சிங்கப்பூரில் மரக்கறி உணவு உண்போர் சங்கம் ஒன்று இருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன் அதன் தலைவராக இருந்தவர் ஓர் ஆங்கிலேயர், வழக்கறிஞர். அச்சங்கத்தில் சீனர்கள் நிறையச் சேர்ந்திருக்கின்றனர். சிங்கப்பூரில் சீன சைவ உணவுக் கடைகள் பெருகிக் கொண்டே போவதைக் கவனித்திருப்பீர்கள். அவர்கள் மரக்கறி உணவை உண்டு வாழும்போது சைவர்களாகிய நாம் வாழ முடியாதா? மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்கள் சிறுகச் சிறுகப் புலால் உணவை நிறுத்திவிட வேண்டும். புலால் உணவில் கொழுப்புச் சத்து மிகுதியாக இருப்பதால் இதயநோய் வருவதற்கு வாய்ப்பு அதிகம் உண்டு. புலால் நீக்கி வாழ்வது உடல் நலனுக்கும் சமய உயர்வுக்கும் ஏற்றதாகும்.

பொருளாதாரம்

"வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமை தப்பி" வாழ வேண்டு மெனச் சிவஞான சித்தியார் கூறுகிறது. மிகுதியான செல்வம் வாழ்வில் மையலை விளைவிக்கும். வறுமையோ வாழ்வில் துன்பத்தை விளைவிக்கும். எனவே, அளவோடு நியாயமான வழியில் பொருள் ஈட்டி வாழ வேண்டு மெனச் சைவம் சொல்கிறது. இதுவே சைவப் பொருளாதாரக் கோட்பாடாகும்.

உணவை அதிகமாக உண்டாலும் தீமை விளைவிக்கும்; குறைவாக உண்டாலும் தீமை விளைவிக்கும். அளவோடு உண்டால்தான் நலம் தரும். அதுபோலச் செல்வம் அளவோடு இருந்தால்தான் மனிதப் பண்போடு வாழ முடியுமெனச் சைவம் சொல்கிறது.

போதை மருந்து உண்டாக்கும் வெறியிலும் பார்க்கப் பணம் மனிதனுக் குப் பெரியதொரு வெறியை ஊட்டுகிறது. போலிப்புகழ், ஆடம்பரம், செருக்கு,

அதிகாரம் ஆகிய அனைத்தும் மிகுதியான செல்வத்தின் உடன் பிறப்புக்களா கும். பசி, கவலை, ஏக்கம், முதலியவை அனைத்தும் வறுமையின் உடன்பி றப்புகளாகும். மிகுதியான செல்வமும் இன்பத்தைத் தராது; வறுமையும் இன்பந் தராது.

ஒவ்வொருவரும் உழைப்பை முக்கியமாகக் கொள்ள வேண்டும். வாணிபத் தில் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். நிறுவனங்களிலோ அரசாங்கத் திலோ வேலை செய்தால் இலஞ்சம் வாங்கும் எண்ணம் அறவே ஒழிய வேண்டும். அரசியலில் ஈடுபடுவோரும் சமூகப் பொதுப் பணியில் ஈடுபடு வோரும் நேர்மைதான் முக்கியம் என்பதை உணரவேண்டும். இடைவிடாத முயற்சியும், நேர்மையும் ஒழுங்கும் இருந்தால் ஒருவன் எப்படியும் தன் தேவைக்கேற்ற அளவு பணம் சம்பாதிக்க முடியும். கோடி கோடியாய்ப் பணம் சேர்க்கவேண்டும் என ஒருபக்கம் மக்கள் அலைகின்றனர். அதே சமயம் சில நாடுகளில் பாட்டாளி மக்கள் தமக்கு அடிப்படை வசதியாவது தரவேண்டும் எனக் கிளர்ச்சி செய்கின்றனர். ஒருவரிடம் பெரும்பணம் குவிவதைத் தடை செய்வது பல நாடுகளில் வருமானவரிச் சட்டத்தின் குறிக்கோள்களுள் ஒன்றாகும். மறைமுகமாகப் பணம் சேர்க்கும் முறை இக்காலத்தில் பெருகியி ருந்தாலும் அரசாங்கச் சட்டதிட்டங்கள் ஒரு காலத்தில் இவற்றை அடக்கவே செய்யும். எனவே, நியாய வழியில் அளவாகப் பொருளீட்டி வாழ்வதுதான் சிறந்த வாழ்க்கை நெறியாகும்.

வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதைத் தவறெனச் சைவம் சொல்லவில்லை. "பூசுவன பூசியும் புனைவன புனைந்தும் எழுநிலை மாடத் திருந்தும்" எனப் பட்டினத்தடிகள் சொல்வது இதனைத் தெளிவுறுத்தும். ஆனால் செருக்கோடு கூடிய ஆடம்பர வாழ்க்கையைச் சைவம் கண்டிக்கிறது. வசதிகள் பிறர்க்கும் கிடைக்கவேண்டும் என எண்ணி ஏழை எளியவர்க்கும், ஊனமுற்றவர்க்கும், நம் ஆற்றலுக்கேற்ற உதவியை அவசியம் செய்யவேண் டும். பிறர்க்குப் பொருளாதார வகையிலோ பிறவகையிலோ நம்மால் முடிந்த உதவியைச் செய்யாவிட்டால் நம் வாழ்க்கை விலங்கு வாழ்க்கையிலும் கீழ்ப்பட்டதாக முடியும்.

சமூகத் தொண்டு, நாட்டுத் தொண்டு, சமயத் தொண்டு முதலியவற்றில் ஈடுபடாமல், நம் குடும்பத்தை மட்டுமே கவனித்துக் கொண்டு வாழ்ந்தால் அது மனிதப் பிறவியைப் பாழாக்கியதாகவே கொள்ளப்படும்.

இதுகாறும் கூறியவை சைவப் பொது ஒழுக்கங்களாகும். எல்லாச் சமயங்களும் இவற்றில் பெரும்பாலானவற்றை ஏற்றுக்கொள்கின்றன.

சிறப்பொழுக்கம்

சைவத்திற்கென்றே சிறப்பொழுக்கங்கள் சில உண்டு. அவற்றையும் நம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு கடைப்பிடித்தால்தான் சைவ வாழ்க்கை நெறியை நாம் முழுமையாகக் கடை பிடித்த பயன் உண் டாகும்.

முழு முதற்பொருள்

சைவம் சிவபரம்பொருளை முழுமுதற் கடவுள் எனக் கொள்கிறது. இறைவன் நம் பொருட்டுக் கருணை காரணமாகத் திருமேனி கொள்கிறான் என்பது சைவ தத்துவம். அவ்வாறு கொண்ட திருமேனிகள் பலவாகும். அவற்றுள், நடராஜர், தட்சணாமூர்த்தி, அம்மையப்பர், சோமாஸ்கந்தர், அம்பாள், சிவலிங்கம், முதலிய திருமேனிகள் முக்கியமானவை ஆகும். விநாயக மூர்த்தமும், முருகன் மூர்த்தமும் சிவபெருமானின் திருமேனிகளே என்பதை விநாய புராணமும், கந்தபுராணமும் தெளிவு செய்கின்றன. நாம் இவற்றுள் ஒன்றை நம் உபாசனாமூர்த்தமாக எடுத்துக்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் வழிபட்டால் மன ஒருமை உண்டாகாது. நாம் விரும்பிய ஒரு

வடிவத்தையே எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனை வடிவங்களைப் பார்க்கும் போது, நம் வழிபடு மூர்த்தமாக அவற்றைப் பாவித்து வழிபாடு செய்ய வேண்டும்.

காடன், மாடன் போன்ற சிறு தெய்வங்களையோ, தேவர்கள் போன்ற அதிதெய்வங்களையோ வழிபடக்கூடாது. சிவமூர்த்தங்களுள் ஒன்றையே உறுதியாக எடுத்துக் கொண்டு வழிபாடு செய்யவேண்டும்.

பழக்கங்கள்

காலையில் படுக்கைவிட்டெழும்போது இறைவன் நாமங்களைச் சொல்லிக்கொண்டே எழவேண்டும். கால், கை, முகம் கழுவித் திருநீறணிதல் வேண்டும். இதனை நாம் பழக்கத்தில் கொண்டுவந்துவிட வேண்டும்.

குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து சிவபுராணம் ஓதல் வேண்டும். பிறகு எழுந்துசென்று காலைக்கடன்களை முடிக்கவேண்டும்.

குளித்துத் திருநீறு அணிந்து பூசை அறைக்குச் செல்லவேண்டும். பூசை அறையில் உபாசனா மூர்த்தியின் படத்திற்கு மலர் மாலை இட்டு வழிபாட்டைத் தொடங்கவேண்டும். ஊதுபத்தி ஏற்றிச் சாம்பிராணி இட்டுத் திருவிளக்கைப் பொருத்திச் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்யவேண்டும்.

திருமுறைகள் பன்னிரண்டு உண்டு. முதல் திருமுறையிலிருந்து தொடங்கி நாள் ஒன்றுக்கு 51 பாட்டு வீதம் ஓதி வந்தால் ஓர் ஆண்டில் திருமுறைகள் முழுவதையும் பாராயணம் செய்துவிடலாம். அடுத்த ஆண்டில் மறுபடி இதுபோலத் தொடங்கவேண்டும். இவ்வாறு நம் வாழ்நாள் முழுதும் செய்யவேண்டும்.

உபாசனாமூர்த்தியின் முன் இருந்து திருமுறை ஓதிய பின்னர், 108 மணிகள் உள்ள உருத்திராட்ச மாலையைக்கொண்டு சிவாயநம என்னும் திருவைந்தெழுத்து மந்திரத்தை ஜபிக்க வேண்டும். முருகப் பெருமானாக இருந்தால் ஓம் குமாராய நம என்றோ ஓம் சரவணபவ என்றோ ஜபிக்கலாம். கணபதியாக இருந்தால் ஓம் மகாகணபதியே நம என்று ஜபிக்கலாம். அம்பாளாக இருந்தால் ஓம் பார்வதி தேவியே நம என்று ஜபிக்கலாம். உபாசனாமூர்த்தி எதுவாக இருந்தாலும் திருமுறைகளை ஓதியே ஆகவேண்டும். முருகனாக இருந்தால் திருமுறைகளோடு திருப்புகழ், கந்தர் அனுபூதி ஓதலாம். விநாயகராக இருந்தால் பதினோராம் திருமுறையில் உள்ள விநாயகர் பாடல்களையும் விநாயகர் அகவலையும் ஓதலாம்.

தியான முறை

மந்திர ஜபத்தின் போது உபாசனாமூர்த்தியின் திருவுருவத்தை மானசீகமாக இருதயத்தில் ஒளியின் நடுவே இருப்பதாகத் பாவித்துத் தியானிக்க வேண்டும். வேறு எந்த எண்ணமும் இன்றி உருவத்திலேயே மனம் ஒன்றியிருக்க வேண்டும். இவ்வாறு 10 நிமிடங்கள் தொடக்க காலத்தில் தியானம் செய்தால் போதும். அதன்பின் எந்த எண்ணமும் இன்றி 2 நிமிடங்கள் அமைதியாக இருத்தல் வேண்டும். பிறகு மீண்டும் உபாசனா மூர்த்தியைத் தியானித்து நமக்கு வேண்டிய கோரிக்கைகளை வாய்விட்டுச் சொல்லிப் பிழைகளை மன்னிக்கும்படி வேண்டிப் பூசையை நிறைவு செய்ய வேண்டும். இறைவனிடம் இம்மைப் பயன்களையும் வேண்டலாம். ஞானத்தையும் வேண்டலாம். புலனடக்கத்தையும் வேண்டலாம். எல்லாவற்றையும் அவனிடம் வேண்டிப் பயன்பெற நமக்கு உரிமை உண்டு. "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை" என்பது சுந்தரர் வாக்கு.

நீராடச் செல்லும் போதும், உண்ணப் போகும் போதும் படுக்கைக்குச் செல்லும் போதும், பதினொரு முறையாவது இறை நாமங்களைச் சொல்ல வேண்டும். வீட்டிலிருக்கும் போது எப்பொழுதும் திருநீறு அணிவது சிறப்பு.

இரவு ஏழு மணியளவில் குடும்பத்தோடு ஒன்றாக இருந்து 'கோளறு

பதிகம்' 'நமச்சிவாய பதிகம்' முதலியவற்றை ஓதி 15 நிமிடங்களில் வழிபாட்டை முடித்துக் கொள்ளலாம்.

குடும்பத் தலைவி எப்பொழுதும் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப உடை அணிந்து திருநீறு, குங்குமம் இட்டுச் சைவப் பொலிவுடன் திகழ வேண்டும்.

வாரம் ஒரு முறையாவது அவசியம் குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் திருக்கோயிலுக்குச் சென்றுவர வேண்டும். வார வழிபாடு, கூட்டு வழிபாடு முதலியவற்றிலும் கலந்துகொள்ள வேண்டும். திங்கட்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை விரதமிருப்பது நல்லது.

குடும்பத்தில் உள்ளோர் அனைவரும், வீட்டில் தமிழிலேயே பேச வேண்டும். தமிழ் இலக்கியங்களையும், சைவ நூல்களையும் இடைவிடாது பயில வேண்டும். தமிழ்ப் பயிற்சி இருந்தால்தான் திருமுறைகளையும், சித்தாந்த சாத்திரங்களையும் பொருளறிந்து படிக்க முடியும்.

தலயாத்திரை

பண வசதியும் ஓய்வும் கிடைக்கும் போது குடும்பத்தார் அனைவரையும் கூட்டிக்கொண்டு இந்தியாவில் உள்ள சிவத் தலங்களையும் முருகன் தலங்களையும் அவசியம் தரிசித்து வரவேண்டும்.

திருக்கோயில்களில் விழாக்கள் நடைபெறும்போது அவ்விழாக்களைக் காணக் குழந்தைகளை அழைத்துச் செல்லவேண்டும். அப்பொழுதுதான் குழந்தைகள் சைவ உணர்வோடு வளரும்.

சந்நியாசிகள் வருகை

சிங்கப்பூருக்குத் தமிழ்நாட்டிலிருந்தும், வட இந்தியாவிலிருந்தும் அடிக்கடி சந்நியாசிகள் பலர் வருகின்றனர். அவர்களில் சித்தாந்த சாத்திரங்களில் யாருக்குப் பயிற்சி இருக்கிறது என்று தெரிந்துகொண்டு அவர்கள் சொல்வதை சைவர்கள் பின்பற்ற வேண்டும். சித்தாந்த சாத்திரங்களில் தேர்ச்சியில்லாத சிலர் ஆங்கிலத்தில் பேசுவதால் தமிழ் மக்கள் அப்பேச்சுகளில் மயங்கிவிடுகின்றனர். தமிழில் உள்ள சிந்தாந்த சாத்திரங்கள் பயின்றால் தான் அவர்கள் கருத்துக்கள் பல தவறானவை என்பது புலனாகும்.

ஆங்கில மொழிப் பயிற்சி நமக்கு மிக அவசியம். விஞ்ஞானம், மருத்துவம், பொருளாதாரம், முதலியவற்றை அம்மொழி வாயிலாகத்தான் நாம் நன்கு அறிய இயலும். ஆனால் சமயத் தத்துவங்களைத் தமிழ் மொழி வாயிலாகத் தான் தெளிவுற அறிய இயலும். வடமொழிப் பயிற்சி அவசியம் இல்லை. எனினும் தமிழில் உள்ள சமயக் கருத்துகளை அரண் செய்யும் பல நூல்கள் வடமொழியில் உண்டு. அவகாசம் இருந்தால் வடமொழியையும் பயிலலாம்.

சந்நியாசிகளில் சிலர் 'இரகசிய யோக முறைகளைப்' போதிக்கிறோம் எனச் சொல்லிக் கொண்டு இங்கு வருகின்றனர். இரகசியம் என்றால் அது வியாபாரம் என அறிதல் வேண்டும்.

யோசாகனங்கள் உடல் நலனைப் பாதுகாக்குமாதலால் அவற்றைப் பயிலலாம். ஆனால் 'இரகசிய யோக முறை' என்பது மக்களை ஏமாற்றுகிற முறையே ஆகும். புருவ மத்தியில் திடீரென ஒளி தோன்றுகிறது என்றெல்லாம் சொல்லி 'ஒளிச் சங்கம்' ஒன்றை இவர்களில் ஒருவர் சிங்கப்பூரில் தோற்றுவித்ததும் சிங்கப்பூர் அரசாங்கம் அதனைத் தடை செய்ததையும் நினைவில் கொள்ள வேண்டும். ஞானம் என்பது உடனடியாகப் பெறக்கூடிய ஒன்றன்று. பலகாலம் சாதனை செய்தால்தான் பற்றற்ற நிலை உண்டாகும். பிறகுதான் உண்மையான ஞானம் தோன்றும். 'ஒளிச்சங்க'க் காரர்கள் பற்றை விட்டவர்களாக இல்லை. நம்மைவிட மிகுதியான சுகபோகங்கள் அவர்களுக்கு தேவைப்படுவதால் அவர்கள் உண்மையான சமய ஞானிகள் அல்லர் என்பது

தெளிவு. தாம் பயின்றுள்ள மனோதத்துவ முறைகளைக் கொண்டு இளைஞர்களை மயக்கி ஒளி தோன்றுவதாக அவர்களைச் சொல்லும்படி செய்விக்கின்றனர். மனமயக்கத்திற்குட்பட்ட இளைஞர்கள் உண்மையாகவே தாம் ஒளியைப் பார்த்ததாக நம்பிக் கூறுகின்றனர்.

சைவ ஞானம்

சைவத்தில் உபாசனா மூர்த்தியின் வடிவத்தை இதயக் கமலத்தில் வைத்துச் செய்யும் சிறப்புமிக்க தியான முறை கூறப்பட்டுள்ளது. வேறு தியான முறை வேண்டுவதில்லை. புருவ மத்தியில் உபாசனா மூர்த்தியை வைத்தோ ஒளிவடிவினை நினைந்தோ தியானம் செய்யும் ஒரு முறை திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. அது யோக முறையாகும். பக்தி நெறியில் நிற்போர்க்கு இருதய கமலத்தில் தியானிப்பதே அருளாளர்களால் சிறப்பித்துப் பேசப்பட்டிருக்கிறது. இருதய கமல தியானமே போதுமானது.

பல காலம் தியானம் செய்த பின்னர்தான் இறைவனின் அருளுருவக் காட்சி கிட்டும். இறைவன் குருவடிவில் நின்று நமக்கு ஞானத்தை உணர்த்துவான். அது தான் உண்மை ஞானமாகும்.

வசதியோடு வாழும் போதும், உலக நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை ஆகியவற்றை நினைத்துச் சிறுகச் சிறுக உலகப் பற்றை நீக்க வேண்டும். ஆணவமல மறைப்பு இருப்பதால் உடனடியாக நீக்குவதென்பது இயலாது. சிங்கப்பூருக்கு வருகின்ற சந்நியாசிகளில் பலர் சிங்கப்பூரில் விற்கின்ற பல்வேறு வகைப் பொருட்களைக் கண்டதும் ஆசையோடு அவற்றை வாங்கித் தம் ஊருக்குக் கொண்டுசெல்வதைக் காணலாம். உண்மையான சந்நியாசிகளும் சிலர் இங்கு வருகின்றனர். மக்கள்அவர்களை இனம் கண்டுகொள்ள வேண்டும். எல்லோரையும் குருவாக ஏற்றுக்கொள்ளக் கூடாது.

சிவதீட்சை

சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் விரும்பினால் சிவதீட்சை பெற்றுக்கொண்டு வழிபாடு செய்யலாம். மரபு வழியாக வரும் சைவ ஆசாரியர் பலர் இருக்கின்றனர். பற்றற்றவர்களாக அவர்கள் இல்லாவிட்டாலும் குடும்ப வாழ்க்கையை முறையாக நடத்துபவர்களாக விளங்குகின்றனர். அவர்களிடம் சிவதீட்சை பெற்றுக்கொண்டு வழிபாடு செய்வது நலம் பயக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஒழுக்கம் குன்றாதவர்களாக அவர்கள் இருக்கிறார்களா என்பதை மட்டும் அறிந்து கொள்ளவேண்டும். 'குரு எப்படி இருந்தால் என்ன? அவர் சொல்கிறபடி நாம் வழிபாடு செய்யலாம்தானே?' எனச் சிலர் வினவுவது உண்டு. குரு ஒழுக்கமில்லாதவரென அறிந்தால் நம் உள் மனம் வழிபாட்டில் நம்பிக்கை இழக்கும். 'நம் குரு ஒழுக்கமில்லாதவராகத் தானே இருக்கிறார்? நாம் ஏன் இவ்வளவு கட்டுப்பாடோடு வாழவேண்டும்?' எனும் எண்ணம் தோன்றிச் சமயத் துறையில் உயிர்ப்போடு செல்லாதவாறு நம்மைத் தடுத்துவிடும். இதனால் குலமுறையாக வரும் ஆசாரியரும், இல்லற வாழ்க்கையை முறையாக நடத்துகிறாரா என அறிய வேண்டுவது அவசியமாகும். நல்லொழுக்கம் உள்ள ஆசாரியர் கிடைக்காவிட்டால் நம் திருமுறை ஆசாரியர்களையே மானசீகக் குருவாகக் கொண்டு வழிபாட்டைத் தொடங்கலாம். அதுதான் இக்காலத்தில் யாவரும் எளிதில் பின்பற்றக் கூடிய முறையாகும்.

"தோடுடைய செவியன்" என்னும் திருப் பாடலை ஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்த நிகழ்ச்சியைச் சொல்ல வந்த சேக்கிழார் "மாநிலத்தோர்க்கு உரை சிறப்ப வாய்மலர்ந்தார்" என்று கூறுகிறார். "உரை சிறப்ப" என்றால் வாசக தீட்சை செய்ய என்று பொருள்.

"தோடு, கூற்று, பித்தா மூன்றும் பீடுடைத் தேசிகன் பேரருளாகும்" என்பது ஆன்றோர் வாக்கு.

தோடு என்பது ஞானசம்பந்தர் பாடியருளிய தோடுடைய செவியன் என்னும் பாடலைக் குறிக்கும். கூற்று என்பது அப்பர் சுவாமிகள் பாடியருளிய கூற்றாயினவாறு என்னும் பாடலைக் குறிக்கும். பித்தா என்பது பித்தா பிறைசூடி என்னும் சுந்தரர் பாடலைக் குறிக்கும்.

வழிபாட்டைத் தொடங்குமுன், இம்மூன்று பாடல்களையும் உள்ளடக்கிய பதிகங்கள் மூன்றில் ஏதேனும் ஒரு பதிகத்தை ஓதினால் அந்தப் பதிகம் பாடியருளிய ஆசாரியரின் தீட்சை நமக்குக் கிடைத்து விட்டது என்று பொருள்.

'தோடுடைய செவியன்' ஓதினால் ஞானசம்பந்தரிடமிருந்து நாம் தீட்சை பெற்றிருக்கிறோம் எனக் கொள்ள வேண்டும். 'கூற்றாயினவாறு' ஓதினால் அப்பரிடமிருந்து வாசக தீட்சை பெற்றிருப்பதாதக் கொள்ள வேண்டும். பித்தா பிறை சூடி, பாடினால் சுந்தரரிடமிருந்து நாம் வாசக தீட்சை பெற்றிருக்கிறோம் என்று கொள்ள வேண்டும். திருமுறைகளை நம் சமய குரவர்கள் நமக்காகத் தான் பாடியிருக்கிறார்கள். இவ்வாறு தீட்சை பெற்றுக்கொண்டு திருமுறைகளை ஓதித் திருவைந்தெழுத்து மந்திரத்தை ஜபித்தால் தீட்சை பெற்ற பயன் முழுதும் கிடைக்கும். இதனாலேயே 'தோடு', 'கூற்று', 'பித்தா' மூன்றும் தேசிகன் பேரருள், அதாவது குருவருள் எனக் கூறப்பட்டிருக்கின்றன.

அன்பு வாழ்க்கை

பொய்மை, பொறாமை, வஞ்சனை, செருக்கு முதலியவற்றை நீக்கிச் சைவப் பொது ஒழுக்கங்களையும் தமிழ் மணம் கமழச் சைவச் சிறப்பொழுக்கங்களையும் கடைப்பிடித்து இன்ப அன்பு வாழ்க்கை வாழ்வதே சைவ சமயம் உணர்த்தும் வாழ்க்கை நெறியாகும்.